பக்கங்கள்: 18 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 12 ஞாயிற்றுக்கிழமை 26.06.2022 கதிர் 233

## இது ரகசியம் அல்ல!

இங்கு முன்னர் ஊடகத்துறையில் கால் பதித்து நின்ற – இப்போது ஆஸ்திரேலியாவில் இருக்கின்ற – நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக்காக இன்று இந்தப் பதிவு.

இன்று பொருளாதார உதவிகளுக்காகப் பல 2

# நெருக்கடிக்கு கோட்டாபயவே முழுக் காரணம்!

## பிரபல அமெ. பொருளியலாளர் கருத்து



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகளே உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்குப் பிரதான காரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்காவின் பிரபல பொருளியலாளர் ஸ்டீவ் ஹன்க், ஜனாதிபதி பதவி விலகவேண்டியம அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார். 2

# அரசைத் தாருங்கள்: ஆறு மாதத்தில் தீர்வு!

## யாழில் ஜே.வி.பி. தலைவர் அறிவிப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜூன்26

இந்தியாவும் ஜப்பானும் ரஷ்யாவும் நமக்கு உதவும் என நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் இன்று எமக்கு உதவி செய்யலாம். ஆனால் தொடர்ச்சியாக அவர்கள் எங்களுக்கு உதவி செய்ய போவது கிடையாது. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையை எம்மிடம் தாருங்கள். நாம் தேர்தலொன்றை நடாத்தி, ஆறு மாதத்திற்குள் ஒரு தீர்வினை நாம் ஏற்படுத்துவோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். 2



# அடுத்த வாரம் வரை எரிபொருள் வராது!

## கை விரித்தார் அமைச்சர்



திட்டமிட்டபடி எரிபொருள் கையிருப்பு கிடைக்காமையால் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப் படவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதனால் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்றும் அமைச்சர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். 2A

# திருட்டு, ஊழல், இலஞ்சத்தைக் கைவிட்டு சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்புங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் அரசிடம் கோரிக்கை

திருட்டையும் ஊழலையும் இலஞ்சத்தையும் உடனே நிறுத்தி, சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பேரழிவு ஏற்படும் ஒவ்வொரு 2A



# மட்டு. வாகரை தோணிதாண்டமடுவை ஆக்கிரமிக்கத் தயாராகிறது சிங்களம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பழம்பெரும் வரலாற்று ரீதியான தமிழர்களின் பூர்வீக இடமான தோணிதாண்டமடு பகுதியை பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்க முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் 2A

# முட்டாள்களிடமிருந்து உடனடியாக அதிகாரத்தை மீளப்பெறவேண்டும்

## பேராயர் கர்தினால் வலியுறுத்து

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமான முட்டாள்களிடமிருந்து அதிகாரத்தை உடனடியாக மீளப்பெற வேண்டும்.

– இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:– 2A



## யாழில் எரிபொருள் நிலையத் தாக்குதலின் பின் இளைஞனின் சாவு;

# கைது செய்யப்பட்ட முகாமையாளரும் மற்றைய இருவரும் விளக்கமறியலில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் நகரில் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் அடுத்த நாள் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் மற்றும் தலைக்கவசத்தினால் தாக்குதல் நடத்தியவர்கள் இருவருமே யாழ்ப்பாணம் நீதிவானின் உத்தரவில் ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் செபமாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் 2A

# யாழ். பல்கலை மருத்துவபீட 3 துறைகளுக்கான இருக்கைப் பேராசிரியர்களாக மூவர் நியமனம்







யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மூன்று துறைகளுக்கு துறைக்கான இருக்கைப் பேராசிரியர்களாக (Cadre Chair professor) மூன்று பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அங்கீகாரத்தைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசியர் சி. சிறீ சற்குணராஜா தலைமையில் நேற்று இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்த 2

# நகர்ப்புற பாடசாலைகள் இவ்வாரம் மூன்று நாள்கள்

நாளை திங்கட்கிழமை முதல் ஜூலை முதலாம் திகதி வரையான வாரத்தில் எவ்வாறு பாடசாலைகளை நடத்துவது என்பது தொடர்பில் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:–

அதன்படி, கடந்த 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை, கிராமப்புற பாடசாலைகளில் பாடசாலைகள் இடம்பெற்ற விதத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்துச் சிரமங்கள் இல்லாமல் வழக்கம் போல் பராமரிக்க வேண்டும். 2

## இனி இது ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்புகளிடமும் கைநீட்டி நிற்கின்றது கொழும்பு. அங்கெல்லாம் தமிழர் முகம் தான் என்று இப்பதியில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அதை ஒட்டிய விடயம் இது.

அதைப் பார்த்துவிட்டு கொழும்பு தமிழ் ஊடக ஆசிரியர் ஒருவர் ஒரு விடயத்தை நினைவூட்டி, அதைக் குறிப்பிட மறந்து விட்டீர்களே என்றார்.

"உங்கள் கருத்துப்படி நிதியை சூறையாடியது ராஜபக்ஷ குடும்பம் என்றால், அவர்களுக்கு அப்படி சுருட்டிய பணத்தை பாதுகாப்பாக – நம்பிக்கையாக – முதலீடு செய்யவும் கூட ஒரு தமிழர்தான் தேவைப்பட்டார். அதைக் குறிப்பிட மறந்து விட்டீர்களே!" – என்றார்.

ஆமாம். அவர் சொல்வது சரிதான். குறிப்பிட மறந்து விட்டேன். வாசகர்களின் கணிப்புக்கே அதை விட்டும் விடுகிறேன். என் வாசகர்கள் அச்சில் இரண்டு வரிகளுக்கு மத்தியில், பிரசுரமாகாமல் இருக்கும் விடயங்களைக் கூடக் கனகச்சிதமாக ஊகித்துணரக்கக் கூடியவர்கள். இதையும் ஊகித்துக் கொள்வார்கள். அதனால் விட்டுவிடுகிறேன்.

இனி என் ஆஸி நண்பரின் கதைக்கு வருகிறேன். தமிழர்களின் முக்கியத்துவம் பற்றி எங்களின் தொலைபேசி உரையாடல் திரும்பியது. நான் எனக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றைக் கதையாக அவருக்கு விவரித்தேன். அவர் சப்புக்கொட்டிச் செவி மடுத்தார்.

"இதை ஒரு நாள் வாசகர்களுக்கு எழுதுங்கள். அவர்கள் அறிய வேண்டும்" – என்று அன்பு கட்டளையும் இட்டார். அதை ஏற்று இந்தச் சமர்ப்பணம்.

இது நடந்து சுமார் 40 அல்லது 42 ஆண்டுகள் இருக்கலாம். 1980களின் முற்பகுதி. 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளின் கொழும்பு அலுவலகத்தில் நான் நீதிமன்றச் செய்தியாளர். எனக்கு 20 அல்லது 21 வயது இருக்கும். எனது நிறுவனத்தில் இருந்து ஆங்கிலத்தில் 'சன்', சிங்களத்தில் 'தவஸ' நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆங்கில நாளிதழின் நீதிமன்றச் செய்தியாளர் லலித் அழகக்கோன். பின்னாட்களில் 'டெய்லி மிரர்', 'டெய்லி நியூஸ்' பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர். நிறுவனத்தில் எனக்கு ஓரிரண்டு வருடங்கள் சீனியர். இனவாதம் கிஞ்சித்தும் இல்லாத ஒரு மேலான நண்பர். எங்கள் இருவருக்கும் ஜூனியராகத்தான் நீதிமன்றச் செய்தியாளராக முதன் முதலில் ஊடகத் துறைக்குப் பயிற்சியாளராக வந்து சேர்ந்தார் பின்னாள்களில் 'தி சண்டே லீடர்' ஆசிரியராகவிருந்து படுகொலை செய்யப்பட்ட அமரர் லசந்த விக்கிரமதுங்க.

அச்சமயத்தில் ஒரே வேளையில் இரண்டு முக்கிய வழக்குகள் வந்தன.

ஒன்று – தமிழர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு. கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுக்கள் கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்ற வளாகத்தை நிரப்பத் தொடங்கிய காலம். அவர்களில் இரண்டொரு இளைஞர்களுக்காகக் கட்டணம் செலுத்தி சிரேஷ்ட சட்டத்தரணி கொல்வின் ஆர். டி சில்வாவை ஒழுங்குபடுத்தியிருந்தார் தமிழர்களின் சார்பில் வழக்குகளைக் கையாளும் சட்டத்தரணி சந்திரஹாசன் (தந்தை செல்வாவின் மகன்). மனுதாரர் தரப்பு சட்டத்தரணி சி.வி.விவேகானந்தன். அந்த ஆள்கொணர்வு மனுக்கள் தொடர்பில் எங்களின் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் விலாவாரியாக நானும் லலித்தும் செய்திகளைத் தொடர்ந்து எழுதி வந்தோம்.

அதேசமயம் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைகளினால் குடியுரிமை இழந்து இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவிடமிருந்து சுதந்திர கட்சித் தலைமையைப் பறிப்பதற்கு கட்சிக்குள் ஓரணி மும்முரமாகச் செயற்பட்டது. சிறிமாவோவின் மகன் அனுரா பண்டாரநாயக்கா, பிரதித் தலைவர் மைத்திரிபால சேனாநாயக்க, முன்னாள் சபாநாயகர் ஸ்டான்லி திலகரட்ன என ஒரு பெரிய பட்டாளம் அது. அப்போது சந்திரிகா சு.கவின் அரசியலுக்குள் வரவே இல்லை. மஹிந்தர் எம்.பி. பதவியை இழந்திருந்த இளைஞர்.

அந்தச் சர்ச்சை, டார்லி ரோட்டில் இருக்கும் கட்சியின் தலைமையகம் யார் பொறுப்பில் என்று மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் தொடங்கி உயர் நீதிமன்றம் வரை வந்ததாக நினைவு.

அன்று காலையில் என்னை அலுவலகத்தில் சந்தித்த லலித் அழகக்கோன் "உங்கள் தமிழ் வாசகர்களுக்கு கொல்வின் பிரசன்னமாகும் ஆள்கொணர்வு மனுவே முக்கியம். அதனால் நீங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அதைக் 'கவர்' பண்ணுங்கள். நான் உயர்நீதிமன்றத்தில் சுதந்திரக் கட்சி வழக்கைப் பார்க்கிறேன். பிறகு அலுவலகத்தில் கலந்துரையாடி செய்திகளை மாற்றிக் கொள்வோம்" – என்றார். நான் தலையாட்டினேன்.

எங்கள் பத்திரிகை அலுவலகத்திற்குப் பக்கத்தில்தான் நீதிமன்ற கட்டடத் தொகுதி, சட்டக்கல்லூரி எல்லாம். வழமையாகவே சட்டக் கல்லூரியில் என் வகுப்பு ஒழுங்கு காரணமாக எனக்கு 'விசிட்டிங் ஸ்டூடண்ட்' என்று பெயருண்டு. நான் விரிவுரை மண்டபத்துக்குள் நைஸாகப் புகுந்து, என் பெயரை வரவுப் படிவத்தில் பதிய ஏற்பாடு செய்துவிட்டு, நீதிமன்ற வளாகத்துக்குக் கம்பி நீட்டினேன்.

அங்கே சிறிமாவோ தொடக்கம் எதிரணி பிரமுகர்கள் எல்லோரையும் உயர் நீதிமன்ற வளாகச் சுற்றாடலில் கண்டதும் என் கவனம் அந்தப் பக்கம் திரும்பி விட்டது. நான் வந்த வேலையை விட்டுவிட்டு, விடுப்புப் பார்க்கத் தொடங்கினேன். உயர் நீதிமன்றத்துக்குள் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தார் ஸ்ரீமாவோ. அவருக்கு எதிரான தரப்பில் – அவரை எதிர்த்து வழக்குத் தொடர்ந்திருந்த மைத்திரிபால சேனாநாயக்க, ஸ்டான்லி திலகரட்ன எல்லோரும் நீதியரசர்கள் வர முன்னரே நீதிமன்றத்துக்குள் நுழைந்தனர். சிறிமாவோவைத் தாண்டும் போது தலையைக் குனிந்து, முதுகை வளைத்து அவருக்கு **Bow** பண்ணி, சலாம் வைப்பதுபோல தலைதாழ்த்தி முகமன் கூறிச் சென்றார்கள். என் விடுப்புக்கு நல்ல தீனி. நான் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆரம்பித்துவிட்ட ஆள்கொணர்வு மனு விசாரணையை மறந்து போனேன். நீதிமன்றத்தில் எனக்கு எதிர்ப்புறப் பக்கத்தில் இருந்த லலித் அழகக்கோனும் வேறு சைகையால் சில் எடுத்துக்கொண்டிருந்தார். அந்த வழக்கைப் போய்க் கவனிக்கும்படி சைகை மேல் சைகை. நானோ உயர் நீதிமன்ற விசாரணையில் லயித்துப் போயிருந்தேன்.

திடீரென பின் பக்கத்தில் இருந்து யாரோ சுரண்டுவது போல் இருந்தது. திரும்பி பார்த்தேன். லலித் அழகக்கோன்தான். என்னைத் தரதரவென்று இழுக்காத குறையாக நீதிமன்றுக்கு வெளியே தள்ளிக் கொண்டு வந்தார். வந்ததும் வராததுமாகப் பாய்ந்தார்.

"உங்களுக்கு இந்த வழக்கில் என்ன இன்ட்ரஸ்ட்? நான் முடிந்ததும் 'கொப்பி' தருவேன்தானே. அந்த வழக்கை யார் பார்ப்பது?" என்று சீறினார்.

அவர் கேட்டது நியாயமான கேள்வி. ஆனாலும் அவர் கேட்ட கேள்வியால் என் மூளையில் ஒரு பொறி தட்டியது. நான் அவருக்கு பதில் சொன்னேன். அவர் திகைத்துப் போனார்.

"இந்த வழக்கில் எங்களுக்கு – தமிழர்களுக்கு – என்ன இன்ட்ரஸ்ட் என்றா கேட்டீர்கள்? சண்டை – சச்சரவு – படுவது என்னவோ அம்மாவும் மகனும். சிங்களவர்கள்தான். ஆனாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான். பார்த்தீர்களா?" என்றேன்.

"பாருங்கள். உயர்நீதிமன்ற பென்ஞ்சுக்கு (ஆயத்துக்கு) தலைவர் பிரதம நீதியரசர் சுப்பையா சர்வானந்தா. நீதிமன்றுக்கு உதவி அளிக்க நீதிமன்றம் 'அமிக்கஸ்கூரே'யாக அழைத்து இருக்கும் சட்டமா அதிபர் சிவா பசுபதி. வழக்கை வாதாடும் ஒரு பக்கத்தில் கியூஸி புள்ளநாயகம். எதிர்ப்பக்கத்தில் நவரட்ணராஜா. (என் நினைவு சரியோ தெரியவில்லை. இது ஸ்ரீரங்கநாதன், கியூஸி நடேசன் அல்லது தியாலலிங்கமாகவும் இருக்கலாம். ஆனால் இருவரும் தமிழர்கள் என்பது நிச்சயம்) சர்ச்சைப் படுவது நீங்கள். ஆனால் தீர்த்து வைப்பது தமிழர்களாகிய நாங்கள் அல்லவா? அதனால் எங்களுக்கும் இது முக்கியமான வழக்குதான்" என்றேன் நான். லலித் அழகக்கோன் வாயடைத்துப் போய் நின்றார்.

என் ஆஸி ஊடக நண்பரின் வேண்டுகோளுக்காக இந்தத் தகவல் வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

இப்படி நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள ஹல்ஸ்டோர்ப்பைத் தமிழர்கள் ஆட்டிப்படைத்த வரலாற்று விடயங்கள் தொடர்பில் என் பார்வை அனுபவங்கள் பல உண்டு. அவ்வப்போது அவற்றை அவிழ்த்து விடுவேன்.

இன்று ஹல்ஸ்டோர்ப்பில் சுமந்திரன், கனகேஸ்வரன், தவராஜா என்ற வரிசையில் சிலர்தான். அப்போது நீண்ட பட்டியல் இருந்தது. அவர்கள் எல்லோரையும் நான் தரிசித்த வரலாறுகளை ஒரு புத்தகமாக எழுத முடியும். தமிழினம் தொலைத்த பெருமைகளில் அதுவும் ஒன்றுதான்...!

**- மின்னல் -**

## நகர்ப்புற பாடசாலைகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தப் பாடசாலைகளில் போக்குவரத்து சிரமம் உள்ள ஆசிரியர்கள் இருந்தால், அதிபர்கள் ஊடாக, அந்த ஆசிரியர்களின் பிரத்தியேக விடுமுறையில் விடுவித்து, பொருத்தமான நேர அட்டவணையை தயாரிக்க வேண்டும்.

கடந்த வாரம் நகர்ப்புறங்களில் நடைபெறாத பாடசாலைகளில் வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாள்கள் காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடத்தப்பட வேண்டும்.

இப்பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவுகள் எத்தனை நாள்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் அதிபருக்கு உண்டு.

மாணவர்கள் வராத நாள்களில் இணையவழி முறைமையில், வீட்டுப் பாடங்களை வழங்குதல் உள்ளிட்ட முறைகள் ஊடாக கற்பித்தல் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக, பாடசாலைகளுக்கு சமுகமளிக்க முடியாத ஆசிரியர்களுக்காக, குறித்த நாள்களைத் தனிப்பட்ட விடுமுறையாகக் கருதாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## நெருக்கடிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமெரிக்காவின் முதலாவது ஆய்வுப் பல்கலைக்கழகமான ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளியலாளரான ஸ்டீவ் ஹன்க் மிகமோசமடைந்துவரும் இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்து கடந்த சில மாதங்களாக தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தொடர்ச்சியாகப் பதிவுகளைச் செய்து வருகின்றார்.

அதன்படி இலங்கையின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் நேற்று முன்தினம் செய்திருக்கும் பதிவிலேயே ஸ்டீவ் ஹன்க் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைவரம் படிப்படியாக மிகமோசமடைந்துவருவதாக அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ள அவர், தனது அண்ணளவான மதிப்பீட்டின்படி இலங்கையின் வருடாந்தப் பணவீக்கம் 130.14 சதவீதமாகக் காணப்படுவதாகவும் இது நாட்டின் உத்தியோகபூர்வ வருடாந்தப் பணவீக்கமாகக் காணப்படும் 39.10 சதவீதத்தின் 3 மடங்கை விடவும் உயர்வாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இலங்கை ரூபாவின் பெறுமதி 50 சதவீதத்தால் வீழ்ச்சிகண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைகளே நாட்டில் உணவு, உரம் மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஸ்டீவ் ஹன்க், தற்போது இலங்கை அதன் கடன்களை மீளச்செலுத்த முடியாதவாறு முறிவடைந்திருப்பதாகவும் இது ஜனாதிபதி பதவி விலகவேண்டிய தருணமென்றும் தெரிவித்துள்ளார்.

## அரசைத் தாருங்கள்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியினுடைய யாழ்ப்பாண மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அனுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சி தொடர்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடையே ஒருவித சந்தேகம் காணப்படுகின்றது. அதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எமது தலைமுறை கடந்த காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்டது. தென்னிலங்கையில் ஏற்பட்ட இனவாதமே வடக்கில் பிரபாகரன் ஆயுதமேந்த காரணமானது.

எமது குழந்தைகளும் எதிர்காலத்தில் யுத்தத்தில் ஈடுபட வேண்டுமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். யுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன.

இந்தியாவும் ஜப்பானும் ரஷ்யாவும் நமக்கு உதவும் என நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் இன்று எமக்கு உதவி செய்யலாம். ஆனால் தொடர்ச்சியாக அவர்கள் எங்களுக்கு உதவி செய்ய போவது கிடையாது. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையை எம்மிடம் தாருங்கள். நாம் தேர்தலொன்றை நடாத்தி ஆறு மாதத்திற்குள் ஒரு தீர்வினை நாம் ஏற்படுத்துவோம்

வடக்கில் பல அரசியல் கட்சிகள் உள்ளன. அவை பெரும்பாலும் இன்று பொதுவான பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. நாம் அனைவரும் தேசிய அரசியல் நீரோட்டத்தில் உள்நுழைய வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின் போதே நாங்கள் அனைத்து வகையான இனவாதத்தையும் மதவாதத்தையும் எதிர்த்து செயற்பட முடியும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற பேதமின்றி நாங்கள் ஒன்றிணைய வேண்டும். காணாமல்போனோர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

காணாமல்போனோரின் உறவுகள் எந்தளவு தூரம் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது எனக்கு தெரியும். எனது சகோதரன் காணாமல் போயிருந்தார்.

காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை தொடர்பில் உண்மையை தேடும் சபை ஒன்றை உருவாக்குமாறு நாம் கடந்த காலத்தில் வலியுறுத்தியிருந்தோம். ஆனால் அப்போது இருந்த அரசு அதனை ஏற்கவில்லை.

மக்கள் தங்களுக்குரிய மொழியில் இங்கு தமது செயற்பாடுகளை முன்னெடுக்க உரிமை காணப்பட வேண்டும். இந்த நாட்டில் பாரிய திருப்புமுனை ஏற்பட வேண்டும். – என்றார்.

## யாழ். பல்கலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மருத்துவ பீடத்தின் மருத்துவத் துறை, குழந்தை மருத்துவத் துறை மற்றும் சமுதாய, குடும்ப மருத்துவத் துறை ஆகிய துறைகளில் நீண்ட காலமாக நிரப்பப்படாதிருந்த இருக்கைப் பேராசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பகிரங்க விளம்பரத்துக்கமைவாக கிடைத்த விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மருத்துவத் துறையில் பேராசிரியரும் **(Professor in Medicine)** மருத்துவ நிபுணருமான பேராசிரியர் தி. குமணனை மருத்துவத் துறைப் பேராசிரியராகவும் **(Professor of Medicine)**, குழந்தை வைத்தியத்துறையில்

(2A இல் பார்க்க)

## யாழ். பல்கலை ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியரும் (Professor in Pediatric) குழந்தை வைத்திய நிபுணருமான பேராசிரியர் திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸை குழந்தை வைத்தியத் துறைப் பேராசிரியராகவும் (Professor of Pediatric), சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியரும் (Professor in Community Medicine), சமுதாய வைத்திய நிபுணருமான பேராசிரியர் குமரேந்திரனை சமுதாய மருத்துவத் துறைப் பேராசிரியராகவும் (Professor of Community Medicine), அந்தந்தத் துறைகளுக்கான இருக்கைப் பேராசிரியர்களாகவும் (Cadre Chair professor) நியமிப்பதற்குத் தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

## கைது செய்யப்பட்ட .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 24) என்பவரே உயிரிழந்தார்.

ஊடக பயிலுநரான தனது நண்பருடன் எரிபொருள் நிரப்ப இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கடந்த ஞாயிறுக்கிழமை இந்த இளைஞர் சென்றுள்ளார். அப்போது இடையில் புகுந்து வந்தவர்கள் எரிபொருள் நிரப்ப முற்பட்டதனால் அதனை ஊடக நண்பர் காணொலிப் பதிவு செய்துள்ளார். காணொலிப் பதிவைத் தடுக்கும் நடவடிக்கையாக எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஊடக பயிலுநரின் கையை முறுக்கினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்போது நியாயம் கேட்க முற்பட்ட இளைஞனை எரிபொருள் நிலையத்தில் உள்ளவர்கள் தலைக்கவசத்தினால் தாக்கியுள்ளனர். அதனால் இளைஞனுக்கு வாய், மூக்கு வழியாக குருதி ஓடியுள்ளது.

அங்கிருந்து வீடு சென்ற இளைஞன் மறுநாள் மதியம் நெஞ்சுவலி மற்றும் உடல் சோர்வு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் இரண்டு நாள்களின் பின் அவர் சிகிச்சை பயனின்றி கடந்த புதன்கிழமை இரவு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞனின் சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உள்ள தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்ற போது எரிபொருள் நிரப்பு நிலைய சி.சி.ரி.வி. பதிவு காணப்படவில்லை என விசாரணைகளில் தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முந்தினம் இரவு முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மீது கொலை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொலிஸார் பி அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர். அதனடிப்படையில் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க மறுத்த மன்று ஜூலை 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணி ஊடாக சரண்டைந்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் விசாரணைகளின் பின் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

முகாமையாளர் மீதும் கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பட்டன.

அதனால் முகாமையாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான், அவரையும் வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## முட்டாள்களிடமிருந்து .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு சகோதரத்துவமும், ஒத்துழைப்பும் அவசியமாகும்.

நாடு என்பது அரசியல் தலைவர்கள் அல்லர், மக்களாவர். மக்களுக்குத்தான் உதவி செய்ய வேண்டும். அரசியல்வாதிகளுக்கு உதவி செய்வது பொய் வேலையாகும்.

ஏனெனில், பல ஆண்டுகளாக இந்த நாட்டின் வளங்களை வீணடிக்கும் செயல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. ஒரு தரப்பு அல்ல, பல தரப்பினர் இதில் தொடர்புபட்டுள்ளனர்.

7, 8 பில்லியன் என்ற பாரிய கையிருப்பு எவ்வாறு பூச்சியமானது? மத்திய வங்கியிலிருந்த தங்கம் எவ்வாறு காணாமல்போனது?

ஏன் இவை பொறுப்பற்ற முறையில் வீணாக்கப்பட்டன என்பது குறித்து எப்போதேனும் ஒரு நாளில் விசாரிக்கப்பட வேண்டும்.

அதுதான், மக்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள துன்பத்துக்கு ஒரு தீர்வாகும்.

இந்தப் பணத்தை வீணடித்தவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த முட்டாள்தனமான தீர்மானத்தை எடுத்தவர்கள் யாவர்? மக்களை சௌபாக்கியத்தை நோக்கி கொண்டு செல்லத்தான், தலைவர் ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த வாக்குறுதிதான் வழங்கப்பட்டது.

எனவே, 2, 3 ஆண்டுகளில் நாட்டை முழுமையாகக் கையேந்தும் நிலைக்குக் கொண்டு சென்றவர் யார் என்பது குறித்து முழுமையாக விசாரித்து, அவர்களிடமிருந்து அதிகாரத்தை மீளப்பெறுக்கொள்ள முடியுமாயின் உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்றார்.

## அடுத்த வாரம் வரை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக டுவிட்டர் செய்தியில் அமைச்சர் கூறியிருப்பதாவது:

அடுத்த எரிபொருள் தொகை நாட்டிற்கு வரும் வரை பொது போக்குவரத்து, மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்பட்டு எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரத்தில் ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் விநியோகிக்கப்படும் என்பதால், வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்று அமைச்சர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த வாரமும் அடுத்த வாரமும் இலங்கைக்கு வரவிருந்த பெற்றோல், டீசல் மற்றும் மசகு எண்ணெய் தாங்கிகளை வங்கி மற்றும் விநியோகப் பிரச்சினைகள் காரணமாக உரிய நேரத்தில் விநியோகிக்க முடியவில்லை என விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் இந்த நிலைமையின் கீழ் எரிபொருள் கப்பல் வருகைக்கான திகதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் அமைச்சர் தனது ட்விட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மசகு எண்ணெய்க் கப்பல் வரும் வரை சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்படும் என்றும், தாமதம் மற்றும் அசௌகரியத்திற்கு மன்னிப்பு கோருகிறார் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல முனையங்களில் இருந்து எரிபொருள் விநியோகம் இன்று நண்பகல் 12.00 மணி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## மட்டு. வாகரை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாகரை பிரதேச செயலா ளர் பிரிவுக்கு உட்பட்ட புச்சாக்கேனி கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தோணிதாண்டமடு பகுதியானது மட்டக்களப்பு - திருகோணமலை மாவட்டங்களின் எல்லைப்பகுதியாகும். இப்பகுதியானது நூறுவீதம் தமிழர்கள் வாழும் பகுதியாகும்.

இப்பகுதியை பொலநறுவை மாவட்டத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில் பொலநறுவையைச் சேர்ந்த எல்லைக் கிராம அதிகாரிகள் இந்தக் கிராமத்தை பொலநறுவை மாவட்டத்தினுள் இணைத்து அளவைகள் மேற்கொண்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அத்துடன் அப்பகுதியில் உள்ள மலையை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

1987ஆம் ஆண்டு இப்பகுதியில் பேரினவாதிகளினால் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டமையுடன் இப்பகுதியில் உள்ள தமிழ் மக்களை விரட்டியடித்து இப்பகுதியை கைப்பற்றும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் அவை தடுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமது பகுதியில் வசித்து வருகின்றனர். அத்துடன் தோணிதாண்டமடு பகுதியில் உள்ள மலைகளில் தமிழர்களின் வரலாற்று எச்சங்கள் பல காணப்படுகின்றன. தமிழர்கள் ஆதியாக வழிபாடுகள் மேற்கொண்ட ஆலயங்கள் காணப்படுகின்றன.

அவற்றைத் தொல்பொருள்களாக அடையாளப்படுத்தி பௌத்த விகாரைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே இவற்றினை தடுத்து நிறுத்த மட்டக்களப்பு மாவட்ட அனைத்து பொது அமைப்புகளும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.-எனகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## திருட்டு, ஊழல், .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்திலும் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதில் தங்கள் மகத்தான அர்ப்பணிப்பைச் செய்வது சுகாதார ஊழியர்கள் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அவர்கள் சுதந்திரமாக தமது கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பு எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுப் பிற்பகல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அதிகாரிகளைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தூரநோக்கற்ற ஆட்சியினால் நாட்டின் தாய்மார்களும் குழந்தைகள் தலைமுறையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் கடுமையான மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும், திரிபோ தொழிற்சாலை ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்தளவு குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவையான சுகாதார சேவையில் ஈடுபட்டு வருபவர்களுக்கு உரிய முறையில் எரிபொருளை விநியோகிக்கும் திறன் கூட அரசாங்கத்திற்கு இல்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சுகாதாரத் துறையும் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மருந்துகள் பற்றாக்குறையால் சத்திர சிகிச்சைகள் கூடத் தடைபடும் சூழ்நிலையில் நாடு பாரிய அபாயகரமான நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த பாரிய பேரழிவுக்கான அரசாங்கத்தின் தீர்வு என்ன என்பது குறித்தும் கேள்வி எழுப்பினார்.



# 8 ஆயிரத்து 179 டெங்கு நோயாளர்கள் கடந்த மாதத்தில் நாடுமுழுவதும் பதிவு!

நாட்டில் கடந்த மாதத்தில் 8 ஆயிரத்து 179 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்தில் பதிவான அதிகூடிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இதுவாகும் என அந்தப்பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீம தெரிவித்தார்.

இதனையடுத்து, இந்த வருடத்தில் 32 ஆயிரத்து 385 டெங்கு நோயாளர்கள் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளனர் என வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கடந்த வாரம் மேல் மாகாணத்தில் விசேட




டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.









## மணமகன் விபரம்

பிறந்த திகதி-30.11.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பரணி
கி.பா-25
செவ்-10ல்
தகைமை-B.SC, M.SC
தொழில்-Australia PR
எதிர்பார்ப்பு-Australia+CEYLON பட்டதாரி மணமகள் காரைநகர் முதலிடம்

---

பிறந்த திகதி-27.02.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தரட்டாதி 1
கி.பா-632
செவ்-1ல்
தகைமை - NETWORKINC
தொழில்-SINGAPORE WORK
எதிர்பார்ப்பு- -பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-22.04.1984
மதம்-இந்து
ஜாதி-V சைவம்
நட்சத்திரம்-உத்தராடம் 1
கி.பா-127
செவ்-6ல்
தகைமை-B.COM
தொழில்-MANAGEMENT ASISTANT
எதிர்பார்ப்பு- அரசசேவை சைவ மணமகள்

---

மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம் 4
கி.பா-14
செவ்-சூரி 2ல்
தகைமை- I,T SOFT WARE ENG
தொழில்-U,S,ACOMPANY
எதிர்பார்ப்பு- ENG DOCTOR மணமகள்

---

பிறந்த திகதி-30.04.1992
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-33
செவ்-2ல்
தகைமை-B.SC ELECTRONIC ENG
தொழில்-விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

---

பிறந்த திகதி-04.05.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பூரம்
கி.பா-42
செவ்-3ல்
தகைமை-G.A.Q
தொழில்-COMPANY MANAGER
எதிர்பார்ப்பு- அரசசேவை தனியார் மணமகள்

---

பிறந்த திகதி-04.06.1987
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-பூரம் 2
கி.பா-50
செவ்-8ல்
தகைமை-B.COM
தொழில்- அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை தனியார் மணமகள்

---

பிறந்த திகதி-14.09.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-அனுசம்
கி.பா-7
செவ்-12ல்
தகைமை-MECHANI-CAL TECHNOLOGY
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- வெளிநாடு PR மணமகள்

## மணமகள் விபரம்

பிறந்த திகதி-29.07.1996
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பூராடம் 1
கி.பா-18
செவ்-9ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR ENG UK, Australia மணமகன்

---

பிறந்த திகதி-23.04.1991
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-மகம்
கி.பா-20
செவ்-7ல்
தகைமை-B.A
தொழில்-அரசசேவை ஆசிரியர்
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகன்

---

பிறந்த திகதி-25.02.1992
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அனுசம் 1
கி.பா-28
செவ்-2ல்
தகைமை-B,SC
தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு- ENG ACCOUNTANT BANK MANAGER மணமகன்

---

பிறந்த திகதி-26.11.1992
மதம்-இந்து
ஜாதி-K பகுதி
நட்சத்திரம்-மூலம் 1
கி.பா-75
செவ்-7ல்
தகைமை-G.C.G A/L
தொழில்- .COMPANY
எதிர்பார்ப்பு-அரசசேவை தனியார் மணமகன்

---

பிறந்த திகதி-14.05.1994
மதம்-இந்து
ஜாதி-K பகுதி
நட்சத்திரம்-மிருகசீரிடம் 4
கி.பா-42
செவ்-12ல்
தகைமை-B.A HONS
தொழில்- COMPANY
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகன்

---

பிறந்த திகதி-12.02.1996
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-விசாகம் 4 5'6"
கி.பா-26
செவ்-9ல்
தகைமை-B.SCCIVIL ENG
தொழில்- Australia PR
எதிர்பார்ப்பு-Australia + CEYLON பட்டதாரி அரசசேவை

---

பிறந்த திகதி-17.12.1993
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-திருகோணம்
கி.பா-18
செவ்-சூரி 10 ல்
தகைமை-BA,B.S
தொழில்- DOCTOR Australia PR
எதிர்பார்ப்பு- DOCTOR ENG மணமகன்

---

பிறந்த திகதி-07.08.1985
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா-37
செவ்-சூரி 5ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR ENG
எதிர்பார்ப்பு- BANK MANAGER மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.















| மல்லாகம் | பண்டத்தரிப்பு | சங்கானை | சாவகச்சேரி | காரைநகர் | நெல்லியடி | யாழ் மத்தி (Town) | புன்னாலைக் கட்டுவன் | வேலணை |
|---|---|---|---|---|---|---|---|---|
| T.P: 021 224 3393<br>070 301 3014<br>077 343 6622 | T.P: 021 225 2333<br>071 255 4135<br>077 434 3798 | T.P: 021 225 1664<br>070 301 3016<br>077 434 3149 | T.P: 021 227 0616<br>071 577 0616<br>077 435 3995 | T.P:<br>021 225 2454<br>070 510 2484 | T.P:021 226 0999<br>071 755 0999<br>077 261 2446 | T.P: 021 222 8004<br>070 301 5004<br>070 301 3017<br>077 998 6247 | T.P: 021 224 5001<br>076 384 0684<br>077 934 6509 | T.P:<br>021 221 5472<br>070 301 3012 |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யார் ஓதும் வேதம் இது?

**"நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமான முட்டாள்களிடமிருந்து அதிகாரத்தை உடனடியாக மீளப் பெற வேண்டும்" – என்று கூறியிருக்கிறார் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.**

**அவர் கூறுவதும் – கோருவதும் – காலிமுகத் திடலில் 'கோட்டா கோ கம' போராட்டம் நடத்துவோரின் இலக்கும் ஒன்றுதான். இந்த விடயங்களில் இனி மேலும் பூடகமாகப் பெயர் குறிப்பிடாமல், ஒளித்து விளையாடுவதில் அர்த்தமில்லை. வெளிப்படையாகப் பேச வேண்டிய வேளை வந்து விட்டது.**

**வெளிப்படை என்பது வெறுமனே ஆள்களின் பெயர்களை வெளிப்படையாகச் சுட்டிப் பேசுவது மட்டுமல்ல, அதையும் தாண்டி, அதில் விடயங்கள் உள்ளன.**

**"நாடு என்பது அரசியல் தலைவர்கள் அல்லர். மக்களாவர். மக்களுக்காகத்தான் உதவி செய்ய வேண்டுமே ஒழிய அரசியல்வாதிகளுக்கு அல்ல" – என்றும் பேராயர் கூறியிருக்கின்றார்.**

**அது முற்றிலும் உண்மை. சரி பேராயர் கூறும் 'மக்கள்' என்பவர்கள் யார்? அவர் யாரை மக்கள் என்று கருதி நடந்தார்? – என்ற கேள்வி எழுகின்றது.**

**இன்று ஒரு மதத் தலைவராக, இலங்கை மக்களுக்குப் பொருளாதார ரீதியில் பேரழிவு ஏற்படுத்தப்படுகின்ற போது இவ்வளவு சீற்றம் கொள்ளும் பேராயர், இந்தப் பேரழிவுகளுக்குக் காரணமானவர்களை வளர்த்தெடுத்தது தங்களின் மத ரீதியான – நீதியின்பாற் செயற்படாத – பொறுப்பற்ற போக்குத்தான் என்பதை எண்ணிப்பார்த்தாரா என்பதே பிரதான கேள்வி.**

**இந்த நாடு இத்தகைய சர்வாதிகாரிகளின் – எதேச்சாதிகாரிகளின் – கைகளில் சிக்குண்டமைக்கு பிரதான காரணகர்த்தாக்களில் தானும் ஒருவர் என்பதை மறந்து அவர் இப்போது தத்துவம் பேசுகின்றமைதான் விநோதத்திலும் விநோதம்.**

**தமிழர் தேசத்தின் மீது, தமிழ் மக்கள் மீது, வரலாற்றுப் பேரழிவு நிகழ்த்தப்பட்டபோது – மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தும் விதத்தில் இழைக்கப்பட்ட போது – யுத்தக்குற்றங்கள் மிக மோசமாகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட போது – மனித உரிமைகள் மீறப்பட்ட போது – ஏன் இப்போதைய நெருக்கடிகளிலும் விட மிக மிகக் கொடூரமான பேரழிவுக்குள் பல லட்சம் தமிழ் மக்கள் தள்ளப்பட்ட போது – அவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டிய மதங்களின், மதத் தலைவர்களின் உயரிய தார்மீகக் கடப்பாட்டில் இருந்து தவறிய பெரும் குற்றவாளிகளில் இந்தப் பேராயரும் ஒருவர். மனித மாண்புகளுக்கு மாறான அந்தக் குரூரக் குற்றங்களை கொடூரமாக இழைத்த அந்தத் தரப்புக்கு அதைச் செய்வதற்கு ஆசீர்வாதமும் அங்கீகாரமும் வழங்கி அனுப்பிய மதத் தலைமைத்துவக் குற்றவாளிகளில் தானும் முக்கியமானவர் என்பதை அவர் மறந்து விட்டு இப்போது நியாயம் பிளக்கின்றார்.**

**அவர் போன்றோரின் அத்தகைய நடவடிக்கைகள்தான் இன்றைய இத்தகைய ஆட்சியாளர்களை உருவாக்கி, அதிகாரத்துக்குக் கொண்டு வந்தன என்பதை அடியோடு மறந்து இப்போது அவர் பேசுவது வேறு யாரோ வேதம் ஓதுவது போல இருக்கின்றது.**

**இன்னும் கூட காலம் கடந்து சென்று விடவில்லை. இயேசுவின் உயரிய போதனைகளின் வழி நடக்காமல், அன்று தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களைப் பார்த்திருந்த பெரும் குற்றத்துக்காக மன்னிப்பு கேட்பதற்கு அவருக்கு இன்னமும் காலம் இருக்கின்றது. ஆனால் அத்தகைய தாராளமான – உயரிய – விசாலமான் – மனம் அவரிடம் இருக்கின்றதா என்பதுதான் முதல் கேள்வி. மற்றவரைக் குற்றம் சுமத்த முதல் தன்னில் ஊறிக் கிடக்கும் பெருங்குற்றத்தை அவர் பார்த்துக் கொள்வதே நல்லது.**

## பாடசாலைக்குச் செல்ல முடியாது தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு!

தமக்கு முறையான அறிப்பு இல்லையென்றால் திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்ல முடியாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு ஏதாவது பொறிமுறையை உருவாக்குமாறு பல தடவைகள் அரசிடம், அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்தோம்.

அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. நாளுக்குநாள் நெருக்கடிகள் அதிகரித்தே செல்கின்றன. பொதுமக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்துவிட்டன.

இந்த நிலையில் எமது போக்குவரத்துக்கான பொறிமுறை உருவாக்கப்படாவிட்டால் திங்கள் முதல் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது என்பதை கல்வி அமைச்சிற்கும் பெற்றோருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இது தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியபோது வடமாகாணத்தில் விசேடமாக தூர இடங்களுக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்களின் நிலை தொடர்பாகப் பேசியபோது, அவர்கள் பாடசாலை அதிபருக்கு முறைப்படி அறிவிக்குமாறும் அதனை ஏற்றுக்கொள்ளாத அதிபர்கள் தொடர்பாகத் தமக்கு தகவல் தருமாறு கூறியுள்ளார்.

ஆகையால் தூர இடங்களுக்குப் பணிக்குச் செல்வோர் போக்குவரத்து இடர்பாடு தொடர்பாக அதிபருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்துகள் சீராகாவிட்டால் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாத சூழ்நிலையை பெற்றோர்கள் புரிந்து கொண்டு உங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாது வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இல்லையேல் பெற்றோராகிய நீங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு மார்க்கத்தை உருவாக்குங்கள்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்து பொறிமுறை சீராகவில்லையென்றால் திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்லவேண்டாம் என நாட்டில் உள்ள அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு விநயத்துடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

## நீங்கள் பாற்சோறு பரிமாறி கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள்!

**மத அரசியல் சிவில் பிரதிநிதிகள் கூட்டத்தில் மனோ இடித்துரைப்பு**



காலிமுகத் திடல் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், போராட்டத்தை நாம் அங்கிருந்து கற்றோம் என நீங்கள் நினைக்கக் கூடாது. நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள். நாம் மதவாதத்தால், இனவாதத்தால், அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டு வரும் ஓர் இனம். இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாகப் போராடி வருகிறோம். நாம் எப்போதும் ஜனநாயகப் போராளிகள்தான். அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எம் ஜனநாயகப் போராட்டம் தொடரும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறினார்.

கொழும்பு பத்தரமுல்லை இம்பீரியல் மொனார்ச் விடுதியில் நடைபெற்ற 'சீர்திருத்தத்திற்கான கூட்டு' என்ற சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஓமல்பே சோபித தேரர் உட்பட மதத்தலைவர்கள், நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் உரையாற்றிய மனோ எம்.பி. மேலும் கூறியவை வருமாறு –

225 பேர் கொண்ட நாடாளுமன்றம் என்ற சொற்பதம் இங்கே ஏற்பாட்டாளர்களால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அந்த கும்பலில் எங்களை போடாதீர்கள். இந்த கோட்டாபய அரசாங்கத்தை நாங்கள் கொண்டுவரவில்லை. நாம் எப்போதும் இந்த ராஜபக்ஷர்களை எதிர்த்தே வந்துள்ளோம். நாங்கள் ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகள். நீங்கள் சொல்லும் அந்த 225 பேர் வேறெங்கோ இருக்கிறார்களோ எனக்குத் தெரியவில்லை. நான் அந்த கும்பலில் இல்லை என்பது எனக்கு தெரியும். நான் மக்களுடனேயே இருக்கிறேன். நான் கட்சி மாறி சோரம்போன அரசியல்வாதி அல்லன்.

காலிமுகத் திடல் போராட்டத்தை நாம் கொள்கைரீதியாக ஆதரிக்கிறோம். 'கோட்டா–கோ–ஹோம்' என்ற கோஷத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், அதற்காக இங்குள்ள பலரை போல நாங்களும், 'கோட்டா–கோ–ஹோம்' என்ற கோஷத்தை, காலிமுகத்திடலில் இருந்தே கற்றோம் என எண்ண வேண்டாம். ஜனாதிபதி கோட்டா, இதைவிட பலமாக பாதுகாப்பு செயலாளர் கோட்டாபயவாக இருந்த போதே, 'கோட்டா கோ ஹோம்' என கோஷம் எழுப்பி போராடியவர்கள் நாங்கள்.

எங்கள் கொழும்பில் எங்கள் மக்களை வெள்ளை வானில் வந்து, பலவந்தமாக தூக்கி சென்ற வேளையில், 2005 ஆம் ஆண்டிலேயே ராஜபக்ஷர்களை எதிர்த்து போராடியவன் நான். எனது சக போராளி நண்பன் நடராஜா ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டார். என்னை கொலை செய்ய முயற்சிகள் நிகழ்ந்தன.

இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாகப் போராடி வருகிறோம். மதவாத, இனவாத, அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போராடியவர்கள் நாம். நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள்.

ஆகவே, காலிமுகத்திடல் போராட்டத்தில் இருந்து போராட நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் கற்க அங்கு எதுவும் இல்லை. நாம் புது போராளிகள் அல்லர். நாம் எப்போதும் ஜனநாயக போராளிகள்தான். காலிமுகத்திடல் போராட்டத்தை நாம் கொள்கைரீதியாக ஆதரிக்கிறோம். அந்த போராட்டம் மூலம் வரும் மாற்றத்தை நாம் வரவேற்கிறோம். அந்த மாற்றத்தின் மூலம் இலங்கை அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எம் ஜனநாயக போராட்டம் தொடரும். – என்றார்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

## கொழும்பு 26/06/2022

# Green Palace

## 30 W.A. Silva Mawatha, Colombo 06.

### 9.00 a.m -12.00 p.m

இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22957 | வே | 1996**
பன்னாலை | இந்து | Partly Qual. in Nutrition | Customer Service Officer | லண்டன்
ரேவதி (மீனம்) | 192 செ.மீ

**20976 | வே+வி | 1996**
கரவெட்டி | இந்து | BSC, Reading MSC | Studying
உத்தராடம் (மகரம்) | லண்டன்
172 செ.மீ | சூ.செவ்: 01

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24178 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSC Quantity Surveyor
கட்டார் | பரணி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

**22444 | வே | 1994**
அம்பாறை | இந்து | B.Eng ESD Consultant
அவுஸ்ரேலியா | திருவோணம் (மகரம்) |182 செ.மீ | செவ்: 08

**23050 | ந | 1994**
மீசாலை | இந்து | A/L Pharmacist | அவுஸ்ரேலியா
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ

**23119 | வே | 1994**
வேலனை | இந்து | A/L Pizza Business
பிரான்ஸ் | மூலம் (தனுசு)
177 செ.மீ

**23197 | வே | 1994**
வேலனை | இந்து | BBA Managing Director
ஜேர்மனி | உத்தராடம் (மகரம்)
179 செ.மீ | சூ.செவ்: 07

**23941 | வே | 1993**
கிளிநொச்சி | இந்து | BSC Civil Engineer | சிங்கப்பூர்
ரேவதி (மீனம்)
179 செ.மீ | செவ்: 01

**23332 | வே | 1993**
திருநெல்வேலி | இந்து | A/L Staff | சுவிட்சர்லாந்து
திருவோணம் (மகரம்)
178 செ.மீ | சூ.செவ்: 02

**23551 | செ.மு | 1993**
முல்லைத்தீவு | இந்து | A/L Business | அவுஸ்ரேலியா
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ | செவ்: 12

**20277 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MSC Regional Manager
கார்த்திகை (ரிஷபம்)
175 செ.மீ | அவுஸ்ரேலியா

**23266 | வே | 1993**
அரியாலை | கிறிஸ்தவம்
MSC Cyber Security Engineer | பிரான்ஸ்
பூரட்டாதி (கும்பம்) | 170 செ.மீ

**20232 | வே | 1993**
பருத்தித்துறை | இந்து | MSC Software Engineer
அவுஸ்ரேலியா | திருவோணம் (மகரம்) | 189 செ.மீ | செவ்: 12

**23563 | வே | 1993**
உரும்பிராய் | இந்து | BD IT Officer | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
171 செ.மீ | செவ் : 02

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD Safety Coordinator
கனடா | அஸ்வினி (மேடம்)
180 செ.மீ

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து | MBBS Doctor | இந்தியா
பூராடம் (தனுசு)
169 செ.மீ

**22384 | வே | 1996**
ஏளாலை | இந்து | MD Doctor | கனடா
சித்தரை (கன்னி)
165 செ.மீ

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BD | BBS Congras
விசாகம் (துலாம்) | சூ.செவ் : 03
167 செ.மீ | சுவிட்சர்லாந்து

**23809 | வி | 1995**
மட்டக்களப்பு | இந்து | BD Teacher | அவுஸ்ரேலியா
பூசம் (கடகம்)
165 செ.மீ | செவ் : 04

**23527 | வே | 1994**
நெடுந்தீவு | இந்து | MBBS Final Year Medical Student | அத்தம் (கன்னி)
168 செ.மீ | சுவிட்சர்லாந்து

**20454 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MBBS Doctor | அவுஸ்ரேலியா
திருவோணம் (மகரம்)
158 செ.மீ | சூ.செவ் : 10

**23221 | வே | 1993**
சாவகச்சேரி | இந்து | MSC Part Time Worker
மூலம் (தனுசு) | சூ.செவ் : 07
171 செ.மீ | அவுஸ்ரேலியா

**22014 | வே | 1993**
சரவணை | இந்து | BSC Software Engineer
சிங்கப்பூர் | அஸ்வினி (மேடம்)
154 செ.மீ | சூ.செவ் : 03

**23614 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | B.Tech, MD, M.Phil | Studying
இந்தியா | சுவாதி (துலாம்)
170 செ.மீ | செவ் : 01

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD Lab Incharge | லண்டன்
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ் : 12

**21018 | கோ | 1992**
ஏளாலை | இந்து | Reading B.Com | Customer Service Assistant|விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ|செவ்: 02|லண்டன்

**20028 | வே | 1992**
மட்டக்களப்பு | கிறிஸ்தவம்
BD | Team Leader
அத்தம் (கன்னி)
165 செ.மீ | அவுஸ்ரேலியா

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD Regulatory Affairs Specialist
மகம் (சிம்மம்) | செவ்: 02
160 செ.மீ | பிரான்ஸ்

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS Doctor | நோர்வே
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ் : 06


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அமெரிக்காவுடன் உறவு கொண்டாட நாட்டு மக்களை பலியிடுகிறது அரசு!



## திஸ்ஸ விதாரண கடும் கண்டனம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் வரை எரிபொருள் வரிசையில் இருந்து பதிவாகும் மரணங்களுக்கு யார் பொறுப்பேற்பது.

அமெரிக்காவை பகைத்துக் கொள்ளாமலிருக்க நாட்டு மக்களை பலியிடுவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தாமலிருப்பது வேடிக்கையாகவுள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 அரசியல் கட்சிகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பாக அரசாங்கத்திடம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சமூக மட்டத்தில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இது வரை தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை.

மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள். எரிபொருள்,எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தொடர்பிலான பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறைவடையவில்லை.

எரிபொருள் விநியோகத்தில் தோற்றம் பெற்றுள்ள சிக்கல் நிலைமை நாட்டின் பிரதான பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வுகாண அரசாங்கம் நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் ஒக்ரோபர் மாதகாலப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் வரை காத்திருக்கும் போது எரிபொருள் வரிசையில் இருந்து பதிவாகும் மரணங்களுக்கு யார் பொறுப்பேற்பது? எரிபொருள் வரிசைக்கு செல்பவர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

ஆசிய கண்டத்தில் பெரும்பாலான நாடுகள் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக்கொள்கின்றன.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் தீர்மானங்களையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக்கொண்டால் அமெரிக்காவை பகைத்துக்கொள்ள நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருதுகிறார். அமெரிக்காவைப் பகைத்துக்கொள்ளாமலிருக்க நாட்டு மக்களை பலியிடுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ரஷ்யாவிடமிருந்துஎரிபொருளைபெற்றுக்கொள்வது தொடர்பாக அரசாங்கத்திடம் பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். இருப்பினும் இதுவரை சாதகமான பதிலை அரசாங்கம் குறிப்பிடவில்லை. எரிபொருள் மற்றும் எரிவாயு பெறுகைக்கான வரிசை நீண்டு செல்கிறதே தவிர குறைவடையவில்லை. – என்றார்.

# இனத்தையும் மதத்தையும் மதிப்பவர்கள் தமிழர்கள்!

## வீரசேகரவுக்கு சி.வி.கே. பதிலடி

தமிழ்மக்கள் பௌத்த மதத்தையும் சிங்கள இனத்தையும் மதிப்பவர்கள். அவர்கள் இவற்றுக்கு எதிரானவர்கள் அல்லர். யாழ்.நாகவிகாரையின் விகாராதிபதியுடன்மிகுந்தஅன்னியோன்யத்தைப் பேணிவருபவர்கள் நாங்கள். விகாரையின் உள்விவகாரங்களில் என்றும் தலையிட்டவர்கள் அல்லர். சரத் வீரசேகர, கம்மன்பில, வீரவன்ஸ போன்றவர்கள்தான் இனவாதக் கருத்துக்களைப் பரப்பி வருபவர்கள். நாம் அவ்வாறானவர்கள் அல்லர்.

– இவ்வாறு சரத் வீரசேகரவின் நாடாளுமன்ற உரையை கண்டித்து ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம். அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த 21.06.2022 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, அண்மையில் யாழ்ப்பாணம் நாகவிகாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவதற்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது என்று கூறியதாக ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணநகரத்தின்சிரேஷ்டகுடியிருப்பாளர் என்ற வகையில் மட்டுமன்றி இந்த நகரத்தின் நிர்வாகத்திலும் விவகாரங்களிலும் கடந்த 60 வருடங்களாகத் தொடர்பு டையவன் என்ற வகையில் இந்தக்கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறேன். இப்படி எந்த நிகழ்வும் நாகவிகாரையில் நடந்ததாக எவருக்கும்தெரியாது.

இவரின் கூற்று நாடாளுமன்றத்தையும் நாட்டு மக்களையும் தவறாக வழிநடத்தும் உண்மைக்குப் புறம்பான ஒன்றாகும்.

இவரும் இவரைப் போன்றவர்களும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பல தசாப்தங்களாக நாக விகாரையுடனும் அதன் விகாராதிபதியுடனும் மிகவும் மேம்பட்ட புரிந்துணர்வையும் அன்னியோன்மத்தையும் யாழ்ப்பாண மக்கள் பேணி வந்துள்ளனர்.

நாகவிகாரையின் உள்விவகாரங்களில் எவருமே தலையிட்டதும் கிடையாது. அப்படி இருக்கையில் நாகவிகாரையில் புத்த பெருமானின் சிலையை நிறுவதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள்.

அப்படியானவர் யாரும் இங்கு இவர்.

மேலும் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இந்தியாவின் தமிழ்நாட்டிலும் இலங்கையின் வடபகுதியிலும் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த வரலாறு பற்றி பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். இங்குள்ள பௌத்த எச்சங்கள் யாவும் தமிழ் பௌத்த எச்சங்களே தவிர சிங்கள பௌத்த எச்சங்கள் அல்ல.

தென்னிலங்கையின் பௌத்த மத உள்வருகையில் யாழ்ப்பாண தமிழ் மக்களின் பங்களிப்பு முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களின் ஆதரவு இல்லாமல் சங்கமித்தவும் அறஹத் மஹிந்தவும் மாதகல் ஊடாக அநுராதபுரம் சென்று வெள்ளரசு மரத்தை நாட்டி புத்த சமயத்தை பரப்பியிருக்க முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

கால ஓட்டத்தில் சிதைவுற்ற பல சைவ ஆலயங்களின் எச்சங்களை பௌத்த மத எச்சங்கள் என்று புனைந்து பௌத்த விகாரைகளை அமைக்கவும், அந்தந்தப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்த சைவத் தமிழ் மக்களின் நிலங்களை மதத்தின் பெயரால் அபகரிப்பதும் அடாத்தான செயல்கள்.

இவற்றை தமிழ் மக்கள் எதிர்த்து குரல் எழுப்பி போராடியே தீருவர். இவற்றை அச்சுறுத்தல்கள் மூலம் அடக்கி விடலாம் என்பது பகற் கனவு.

தமிழர்கள் கடந்த எழுபது வருட காலத்தில் கே.எம்.பி.ராஜரட்ண, தேமிஸ், என்.கியூ.டயஸ், ஜெயசூரிய, சிறில் மத்திய போன்ற பல இனவாதிகளைக் கண்டவர்கள். – இப்பொழுதும் சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்ற சிங்கள பௌத்த பேரினவாதிகளையும் அதே நிலைப் பாட்டியே உள்ளஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வையும் காண்பவர்கள்.

இவர்களுக்கு எவ்வாறு அவர்களது சிங்கள பௌத்த அடையாளம் உணர்வுபூர்வமானதோ அதேபோல் தமிழ் இந்துக்களுக்கு அவர்களது அடையாளம் உணர்வுபூர்வமானது. இனத்துவ மற்றும் சமய அடையாளங்களைப் பேணிக்காக்கவே நாம் போராடுகின்றோம் என்பதை சிங்கள பேரினவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். எமது போராட்டம் சிங்கள மக்களுக்கோ புத்த மதத்துக்கோ எதிரானது அல்ல. – என்றுள்ளது.

# வெளிப்படைத் தன்மையுடன் ரணில் செயற்படல் வேண்டும்!

## சம்பிக்க வலியுறுத்து



ஜனாதிபதி உட்பட ராஜபக்ஷர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பது எப்பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது.

அரசியல் கட்சிகளுடன் பேச்சுகளை முன்னெடுக்கும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

சிறந்த திட்டங்களை முன்வைக்காவிடின் நாட்டு மக்கள் பிரதமரின் வீட்டையும் முற்றுகையிடுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளார்கள். அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில் உள்ளது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அத்தியாவசிய உணவு பொருள்களின் விலை 3 மடங்கால் அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதே இறுதித் தீர்வு என பிரதமர் குறிப்பிடுகின்றமை முற்றிலும் தவறானது. பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் திட்டத்தை பிரதமர் இதுவரை முன்வைக்கவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கும், மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்தத் திட்டத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கவில்லை.

நல்லாட்சி அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு முன்வைத்த பொருளாதார மீட்சி திட்டத்தை போன்று சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள கூடிய திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி சவாலை ஒரு கட்சியால் மாத்திரம் வெற்றிகொள்ள முடியாது.அரசாங்கம் சகல கட்சிகளுடன் விரிவுபடுத்தப்பட்ட அளவில் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும். கட்சிகளுடனான பேச்சின் போது பிரதமர் வெளிப்படைத்தன்மை யுடன் செயற்பட வேண்டும்.

அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாவிடின் பொதுத்தேர்தலுக்கு செல்வது சாத்தியமானதாக அமையும். ஜனாதிபதி மற்றும் ராஜபக்ஷர்கள் தொடர்பில் அதிகாரத்தில் இருப்பது எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது. – என்றார்.

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 26th of June 2022**

**We welcome students' articles in word for publication**
-Editor-
kalaikkathiredu@gmail.com


# Look at tha picture and write 10 Sentences

## At a Railway Station




01. ..............................................
..............................................
02. ..............................................
..............................................
03. ..............................................
..............................................
04. ..............................................
..............................................
05. ..............................................
..............................................
06. ..............................................
..............................................
07. ..............................................
..............................................
08. ..............................................
..............................................
09. ..............................................
..............................................
10. ..............................................
..............................................

Grammar

## The Passive Voice

The passive voice is used to show interest in the person or object that experiences an action rather than the person or object that performs the action.

"Sam cooks the food" (Active)



(Passive) "The food is cooked by Sam"

| TENSE | ACTIVE VOICE | PASSIVE VOICE |
|---|---|---|
| Present Simple | Sam **cooks** the food | The food **is cooked** (by Sam) |
| Past Simple | Sam **cooked** the food | The food **was cooked** (by Sam) |
| Future Simple | Sam **will cook** the food | The food **will be cooked** (by Sam) |
| Present Continuous | Sam **is cooking** the food | The food **is being cooked** (by Sam) |
| Past Continuous | Sam **was cooking** the food | The food **was being cooked** (by Sam) |
| Going to | Sam **is going to cook** the food | The food **is going to be cooked** (by Sam) |
| Present Perfect | Sam **has cooked** the food | The food **has been cooked** (by Sam) |
| Past Perfect | Sam **had cooked** the food | The food **had been cooked** (by Sam) |
| Used to | Sam **used to cook** the food | The food **used to be cooked** (by Sam) |
| Would Always | Sam **would always cook** the food | The food **would always be cooked** (by Sam) |
| Infinitive | Sam **has to cook** the food | The food **has to be cooked** (by Sam) |
| Modals | Sam **should cook** the food | The food **should be cooked** (by Sam) |

### *Complete the sentences using one of these verbs in the correct form:*

***cause, damage, hold, include, invite, make, overtake, show, translate, write***

1. Many accidents ...................... by dangerous driving.
2. Cheese ...................... from milk.
3. The roof of the building ...................... in a storm a few days ago.
4. There is no need to leave a tip. Service ...................... in the bill.
5. You ...................... to the wedding. Why didn't you go?
6. A cinema is a place where films ......................
7. In the United States, elections for President ............ every four years.
8. Originally the book ...................... in Spanish and a few years ago it ...................... into English.
9. We were driving along quite fast but we ............ by lots of other cars.

***Answers:***
1. are caused
2. is made.
3. was damaged.
4. is included.
5. were invited.
6. are shown.
7. are held.
8. was written, was translated.
9. were overtaken.

### *Put the verb into the correct form, present simple or past simple, active or passive*

1. It's a big company. Four hundred people ...................... **(employ)** there.
2. Water ...................... **(cover)** most of the Earth's surface.
3. Most of the Earth's surface ...................... **(cover)** by water.
4. The park gates ...................... **(lock)** at 7 p.m. daily.
5. The letter ...................... **(post)** a week ago and it ...................... **(arrive)** yesterday.
6. The boat ...................... **(sink)** quickly but fortunately everybody ...................... **(rescue)**.
7. Raman's parents ...................... **(die)** when he was very young. He and his sister ...................... **(bring)** up by their grandparents.
8. I was born in Mumbai but I ...................... **(grow)** up in Delhi.
9. While I was on holiday, my camera ...................... **(steal)** from my hotel room.
10. While I was on holiday, my camera ...................... **(disappear)** from my hotel room.
11. Why ...................... **(Sita / resign)** from her job?
12. Why ...................... **(Sohan / sack)** from his job?

***Answers:***
1. are employed.
2. covers.
3. is covered.
4. are locked.
5. was posted, arrived.
6. sank, was rescued.
7. died, were brought.
8. grew.
9. was stolen.
10. disappeared.
11. did Sita resign.
12. was Sohan sacked.

# 12 Things Kids Want from Their Teachers



As adults, each of us has a chance to make a positive and impactful difference in a child's life.

But in order to do this, we must carefully consider this question:

What matters most to our children?

For 20 years I have been posing this question to my students. At the beginning of every school year, I would ask my students to give me advice on how to be their best teacher. I asked them to think about the times they felt most successful and to consider what the adults in their lives did to make this success possible.

The classroom would become immediately silent as the students wrote intensely for longer than they had ever written before. Smiles would appear on their faces as they reflected on the happy experiences they were remembering. After reading their responses, I would add to my list all the ideas they mentioned.

Surprisingly, many of the responses were the same. Year after year, in every grade level, content area and classroom I was in, regardless of demographics or background, students were saying the same things and had the same message: It's the small things you do that mean the most. That is what they remembered. That is what mattered.

Here is a list of the 12 Most Important things that came out of these amazing conversations:

***1. GREET ME EACH DAY***

Wish me good morning, and send me off with a "see ya tomorrow."

***2. SMILE***

When you look at me, let me see happiness in your eyes.

***3. GIVE ME YOUR ATTENTION***

Sit and talk with me privately; even if only for a second.

***4. IMAGINE WITH ME***

Help me dream of things I might be able to do; not just the things I need to do now.

***5. GIVE ME CHALLENGING CONTENT AND ASSIGNMENTS***

Show me how to handle it. Teach me what to do.

***6. ASK ABOUT ME***

Inquire about my weekend, the game I played, the places I go. It shows you care about my life.

***7. LET ME HAVE TIME***

Time to let things sink in. Time to think. Time to reflect, kamagra, process, and play.

***8. DEMAND OF ME***

Hold me accountable to high standards. Don't let me get away with less if you know I am capable of doing better.

***9. NOTICE ME***

Leave special messages in my desk or locker. Just a quick note that says you notice something right.

***10. LET ME ASK THE QUESTIONS***

Even if my questions are off topic, let me ask them. It will show that I am thinking about new perspectives, curious, and willing to learn more. Let me have the chance to show what I am wondering about, not just what I know.

***11. ENGAGE ME***

I came to you in love with learning. Keep me excited, keep me wanting more.


***12. TRUST ME***

Believe that I can do it. Allow me the chance. I promise to show you I can.

These words did not fall on deaf ears. I collected them, honored them, and then promised I would do everything within my power to be the teacher they wanted me to be.

What matters to the children in your life?

It's worth a conversation, I promise!




Children spend a major part of their time either in school or at home. Thus, parents and teachers are the ones who tend to have a big impact on their development. They play an important role in shaping a child's attitudes and behaviour.

Parents must create a safe environment at home while helping them build strong, caring relationships. Teachers help children and young adults develop self-esteem and confidence. However, children often get triggered by certain external factors and develop child psychological problems which ultimately ruin their mental health; this is where Child Psychology for Teachers and Parents help.

Child Psychology helps teachers to develop unique teaching techniques that apply to every child. It also gives special attention to those who have learning deficits like ADHD, Autism, etc. A study of child psychology helps the teachers to identify the prime reason for the delay in the mental growth of children.

Here are a few psychological elements teachers need to keep in mind when dealing with children to promote positive and effective psychological development:

Individual differences: People are different from each other. They look, perceive, understand and respond to things differently, the same applies to children too. These differences majorly come from their home environment and it influences the way they behave with other children. Along with that, there are differences in their unique abilities and talents. Understanding of this can be of great help to teachers when it comes to dealing with children.

Learning styles: Like mentioned above, all children are different, so are their ways of understanding and grasping. The traditional lecture method or writing on board may not be effective on all children. Some children tend to be visual learners while others are kinaesthetic. A teacher needs to identify these and be capable of helping them. Below are the different types of learners along with techniques that can help them:

Visual: Using images and videos
Auditory: Using rhythms and lectures
Verbal: reading and memorizing out loud.
Kinaesthetic: Writing or drawing.
Intrapersonal: Learning on their own
Interpersonal: Learning in with others, in a group.

Rewards and punishments: These are techniques are also applied by parents to modify a child's behaviour. Giving a student a reward, especially when it is social in nature, not only helps them continue that behaviour but also encourages others to behave in a similar track. Also when punishing, teachers need to make sure that the nature of it is not such that it affects the student mentally but rather enable them to reflect on their behaviour.

Giving explanations: When making a rule around the class, teachers need to explain the logic behind these rules. When an explanation is given, students are in a better position to understand the importance of and follow it.

Brain plasticity: Teachers need to always keep in mind, while interacting with children that their behaviour tends to have an impact on the child. Be it kind or harsh words, be it a smile or a frown or be it a particular social or academic skill. This is the stage where whatever the child learns creates a new neural connection in the brain enabling the child to remember it later in life.

Identifying and addressing psychological issues: As children spend their majority of time in school, teachers can play an important role in identifying and addressing these problems. Issues such as bullying and child abuse are common psychological difficulties children face. Here are a few identifiers that can help teachers point out psychological issues the child could be facing:

Sudden decrease in academic performance
Sitting or spending most of the time on their own
Being too quiet, if they were talkative earlier
Sudden anger outbursts or aggressive behaviour
Not being able to make friends

How to Understand Child Psychology?

The early years of a child is very crucial for their physical, emotional, and social well being. All these accords to their brain development and their personality development. Understanding children's psychology is not easy but it is very important for parents and teachers to do so.

Realising and accepting a child's qualities, their wants and needs, is the key to being a good Parent or Teacher. They get a sense of security when you accept them just the way they are, and this gives them the confidence to open up to you.

Here are a few tips on how to understand child psychology -

Observe

It is the simplest tool you can use in learning child psychology. By observing the kid while he is playing, asking for a thing, or reacting to certain situations, you get to know a great deal about his overall personality.

Appreciate

Praising children for good work done will boost their self-esteem. However, overpraising them can make them arrogant and snobbish but when you appreciate them for their work, their acceptance or arrogance will help you understand what actually they are expecting from you.

Listen to them

By listening to what a child has to say, you get to know them better. Doing so will make them feel that you are interested in their life. This will in turn help to strengthen the bond between you two and they will take a step forward in listening to what you have to say.

Along with all the above, a teacher needs to be aware of their behaviour around children and need to be a role model for them. Children learn a lot from observation; they also tend to do it unconsciously. Thus at times, it is not necessary to actually tell the child what to do but rather show them by doing it yourself.

யாழ். மகள் சைந்தவி

# கம்பராமாயண காதல்




ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு மையலில் வீழ்வது வெகு பிரசித்தியானது.ஆனால் கம்பராமாயணம் முழுக்க அவர்கள் இருவரையும் முதல் முதல் கண்டவர்கள் காதலில் வீழ்ந்த கதைகளை கம்பன் சுவாரசியமாக சொல்லுகிறான்.

மிதிலையில் ராமன் உலா வருகிறான்.அவனை கண்ட மகளிர் அந்த விநாடியே மையலில் வீழ்ந்தனராம்.

பஞ்சு அணி விரலினார் தம் படை நெடுங் கண்கள் எல்லாம்,
செஞ்செவே ஐயன் மெய்யின் கருமையைச் சேர்ந்தவோ தாம்?
மஞ்சு அன மேனியான் தன் மணி நிறம், மாதரார் தம்
அஞ்சன நோக்கம் போர்க்க, இருண்டதோ? அறிகிலேமால்

அத்தனை கருவிழிகள் காகுத்தன் மேனி சேர்ந்து தான் அவன் மேனி கறுத்ததோ என வியக்கிறான் கம்பன்.

ராமனின் முழு உருவையும் பார்த்து மையலில் யாரும் வீழவில்லையாம்.அவன் தோளை கண்டவர் தோளை மட்டுமே பார்த்தனராம்.தோளைகண்டவருக்கு கண்ணை அதிலிருந்து எடுக்கவே மனதில்லையாம். தாளை கண்டார் தாளையே பார்த்தனராம்.அவன் முழு வடிவையும் எந்த வாள் விழியும் காணவில்லையாம். (அடிமுடி காண முடியாத பரப்பிரம்மத்தின் முழு உருவையும் மானிடரால் காண முடியாதன்றோ?)

தோள் கண்டார், தோளே கண்டார்; தொடு கழல் கமலம் அன்ன
தாள் கண்டார், தாளே கண்டார்; தடக் கை கண்டாரும், அஃதே;
வாள் கொண்ட கண்ணார் யாரே, வடிவினை முடியக் கண்டார்?

அம்புகளை எறிந்து எறிந்து பொன் சிலை போலும் அழகு படைத்த காமனுக்கு அம்புறாத்தூணியே தீர்ந்து போய்விட்டதாம்.இத்தனை பெண்கள் ஒரே நேரத்தில் மையலில் வீழ்ந்தால் அம்புகளுக்கு அவன் எங்கு போவான்?அர்ச்சுனன் போல் அம்புகள் தீரா தூணியையா வைத்திருக்கிறான் காமன்?அம்புகள் தீர்ந்ததால் உடைவாளை எடுக்க வேண்டிவந்ததாம் காமனுக்கு.

வையம் பற்றிய மங்கையர் எண்ணிலர்,
ஐயன் பொற்புக்கு அளவு இலை ஆதலால்,
எய்யும் பொன் சிலை மாரனும், என் செய்வான்?
கை அம்பு அற்று, உடைவாளினும் கை வைத்தான்

காதலை மறைக்க எண்ணினாளாம் ஒரு பெண். மனதை மறைக்கலாம்.முகத்தை கூடவா மறைக்க முடியும்?முகத்தில் தோன்றும் காதல் உணர்ச்சியை அவளால் மறைக்கவே முடியவில்லையாம்

புனம் கொள் கார் மயில் போலும் ஓர் பொற்கொடி,
மனம் கொள் காதல் மறைத்தலை எண்ணினாள்;
அனங்கவேள், அது அறிந்தனன்; — அற்றம் தான்,
மனங்கள் போல, முகமும் மறைக்குமே?

இந்த பெண்களாவது பரவாயில்லை.சீதையை கண்ட ராவனன் நிலை மிகவும் மோசமாகிவிடுகிறது.அதுவும் கண்டதும் காதல் தான்.10 தலை,20 கண்கள் படைத்த ராவனன் சீதையை கண்டதும் தான் தன் 20 கண்களின் சிறுமையை உணர்கிறானாம்.காணக்கண் கோடி வேண்டும் சீதையின் அழகை காண வெறும் 20 கண்கள் தானா என்று அவனுக்கு தோன்றுகிறது. ஆயிரம் கண்களாவது வேண்டாமா இவள் அழகை காண?வெறும் 20 கண்கள் எதற்கு போதும் என வருந்துகிறானாம்.

'சேயிதழ் தாமரைச் சேக்கை தீர்ந்து இவண்
மேயவன் மணி நிறம் மேனி காணுதற்கு
ஏயுமே இருபது? இங்கு இமைப்பு இல் நாட்டங்கள்
ஆயிரம் இல்லை!' என்று, அல்லல் எய்தினான்

கஷ்டப்பட்டு பிடித்த மூவுலகங்களையும் இவள் காலடியில் ஒப்புவித்துவிட்டு,தன் தேவிமாரையும்,தான் பிடித்த இந்திரன் முதலான தேவர்களையும் இவளுக்கு அடிமையாய் தந்துவிட்டு மூவுலகையும் இவள் ஆள இவளுக்கு நானும் அடிமையாய் இருந்து இனி ஏவல்



செய்வேன் என மூவுலகும் ஆளும் லங்காபதி எண்ணுகிறானாம்.

'தேவரும், அவுணரும், தேவிமாரொடும்,
கூவல்செய் தொழிலினர், குடிமை செய்திட,
மூஉலகமும் இவர் முறையின் ஆள, யான்
ஏவல் செய்து உய்குவென், இனி' என்று உன்னினான்

தன் தங்கை சூர்ப்பனகை மீது அவனுக்கு திடீர் பாசம் வந்துவிடுகிறது.அவள் அன்றோ இப்படி ஒரு புவன மோகினியை தனக்கு காட்டினாள்?அவளுக்கு என்ன பரிசு கொடுத்தால் தகும்?தன் ராஜ்ஜியம் முழுவதையும் பரிசாக தந்தாலும் தகுமே என எண்ணுகிறானாம் இராவணன்.

தளை அவிழ் குழல் இவட் கண்டு தந்த என் இளையவட்கு அளிப்பென், என் அரசு' என்று எண்ணினான்

இதே போல் சூர்ப்பனகை,அனுமன்,வாலி முதலியானோர் இவர்களை கண்டதும் காதலில் வீழ்ந்த காட்சிகளை கம்பன் அழகாக வர்ணிக்கிறான்.வாலி காதலில் வீழ்ந்த காட்சி மிகவும் ரசமானது.ராமன் அம்பு பட்டு வீழ்ந்த வாலி முதலில் தரிசிப்பது ராமனை அல்ல. ராம நாமத்தையே.ராம பாணத்தில் பொறிக்கப்பட்ட ராம நாமத்தை கண்டு காதலில் வீழும் வாலி அதன் பின் ராமனை காண்கிறான்.

வான்மிகியின் வாலி வதைப்படலத்தில் வாலி ராமனை வசை பாடுகிறான்.ஆனால் பரம பாகவதனான கம்பன் அதற்கு இடம் தரவில்லை.கம்பராமாயணத்தில் வாலி வசை பாடுவதில்லை.ஸ்தோத்திரம் பாடுகிறான்.

தன் மேல் அம்பு எய்து கொன்றவனை வசைபாட வாலியால் முடியவில்லை.அவனை போற்றி துதிக்கிறான்.அவன் மேனி அழகை,குணநலன்களை புகழ்ந்து பாடுகிறான்.அதை படித்தாலே வாலி ராமன் மேல் கொண்ட காதல் தான் தெரியும்.அல்ல..அல்ல.. கம்பன் ராமன் மேல் கொண்ட காதல் தான் தெரியும்.

வாலி மீது ராமன் அம்பு எய்ததும் மண்ணில் வீழ்ந்த வாலி அந்த அம்பை பறிக்கிறான்.யார் அந்த அம்பை எய்தது என உற்று நோக்குகிறான்.அந்த அம்பில் அவன் எதைக் கண்டான்?

கம்பனின் கன்னல் தமிழில் கேளுங்கள்

மும்மை சால் உலகுக்கு எல்லாம் மூல மந்திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப் பெரும் பதத்தை, தானே
இம்மையே, எழுமை நோய்க்கும் மருந்தினை, 'இராமன்' என்னும்
செம்மை சேர் நாமம் தன்னை, கண்களின் தெரியக் கண்டான்

ராம நாமம் மீது கம்பன் கொண்ட காதல் ராமன் மேல் கொண்ட காதலை விட மேலானதாக தோன்றுகிறது. அந்நாமத்தை வாலி கண்டதும் சாலப்பொருத்தம் தான். மரணத்தறுவாயில் இருப்போனுக்கு ராமநாமத்தை விட சிறந்த துணை எது?

வாலி ராமனை இகழ்ந்துரைக்கிறான்.எப்படி திட்டுகிறான்? கம்பனின் வாயால் கேளுங்கள்.

'வாய்மையும், மரபும், காத்து, மன் உயிர் துறந்த வள்ளல்
தூயவன், மைந்தனே! நீ, பரதன்முன் தோன்றினாயே!
தீமைதான், பிறரைக் காத்து, தான் செய்தால் தீங்கு அன்று ஆமோ?
தாய்மையும் அன்றி, நட்பும், தருமமும், தழுவி நின்றாய்

திட்டும் வார்த்தைகளாம் இவை.நல்ல அழகு தான் போங்கள். தாய்மையும், நட்பும் தருமமும் தழுவி நின்றாய் என திட்டு கிடைக்கிறது.

திட்டு மேலும் தொடர்கிறது.

'குலம் இது; கல்வி ஈது; கொற்றம் ஈது; உற்று நின்ற நலம் இது; புவனம் மூன்றின் நாயகம் உன்னது அன்றோ?

ராமனின் புவன மோகனம் வாலியின் நெஞ்சை கொள்ளை கொண்டுவிட்டதாம்.தடுமாறுகிறான்.

'கோ இயல் தருமம், உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
—
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! — உடைமை அன்றோ?
ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியை, பிரிந்த பின்னை, திகைத்தனை போலும், செய்கை

தன் மீது அம்பெய்தவனை,தன் உயிரை போக்கியவனை எப்படி வர்ணிக்கிறான் என பாருங்கள்.

ஓவியத்து எழுத ஒண்ணா உருவமாம் காகுத்தனுக்கு.கொடுமையே உருவானவனே என சொல்ல வேண்டியவன் புகழ் மாலை போட்டுக் கொண்டிருக்கிறான்.சானகியை எப்படிக்கவி பாடுகிறான் என பாருங்கள்.சனகன் பெற்ற அன்னமாம்.அமுதாய் வந்த தேவியாம்.

அமுதாய் வந்த தேவியை பிரிந்த திகைப்பால் செய்தாயா என் தகப்பனே? என கனிவோடும் காதலோடும் கேட்கிறான் வாலி.

இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால் எப் பிழை கண்டாய்? அப்பா!
பரக்கழி இது நீ பூண்டால், புகழை யார் பரிக்கற்பாலார்?
'ஒலி கடல் உலகம் தன்னில் ஊர் தரு குரங்கின் மாடே,
கலியது காலம் வந்து கலந்ததோ? — கருணை வள்ளால்!

தன் மீது அம்பெய்திவனை தகப்பனே என்கிறான். கருணை வள்ளலே என்கிறான்.

ராமனை இந்த லட்சணத்தில் திட்டி விட்டு லட்சுமணனை பார்த்து என்ன சொல்கிறான்?அவனைப்பார்த்தாவது கோபம் வருகிறதா?இல்லையே எப்படி வரும்?

'தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும், சால்பும்,
நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நின்ற எம்பால், நவை அற உணரலாமே?
தீயன பொறுத்தி' என்றான் — சிறியன சிந்தியாதான்

தருமமாய் நின்ற தம்பியாம்.
தாயாய் நின்று அருள் செய்தானாம்

மரணப்படுக்கையிலும் கண்டவனை காதல் கொள்ள வைத்த வடிவழகாம் கம்பனின் ராமனுக்கு.



காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# உலகின் புதிய அதிசயங்கள்

## கல்விக்கதிர்

- அகரன் -



உலகின் புதிய ஏழு அதிசயங்கள் New 7 Wonders of the World, 2000 - 2007 என்பது உலகின் பழைய ஏழு அதிசயங்களின் யோசனையை புதிய அதிசயங்களின் ஒரு பட்டியலைக் கொண்டு புதுப்பிப்பதாகும். நியூ7ஒன்டர்ஸ் அறக்கட்டளை என்னும் தனியார் நிறுவனம் பிரபல முற்றவைக்கான கருத்துக்கணிப்பு ஒன்றினை ஏற்பாடு செய்தது, வெற்றி பெற்றவை 2007 ஜூலை 7 அன்று போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் அறிவிக்கப்பட்டன.

100 மில்லியன் பேருக்கும் அதிகமா



னோர் தங்கள் வாக்குகளை இணையம் வழியாக அல்லது தொலைபேசி வழியாக பதிவு செய்ததாக சுவிட்ஸர்லாந்து நாட்டை மையமாகக் கொண்டு செயல்படும் நியூ 7ஒன்டர்ஸ் அறக்கட்டளை தெரிவிக்கிறது.

ஒருவரே பலவாக்குகளை பதிவு செய்வதை தடுக்க வழியில்லாததால், இந்த கருத்துக்கணிப்பு தீர்மானமாக அறிவியல் பூர்வமற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது. வொசிங்டனை மையமாகக் கொண்டு செயல்படும் கருத்துக்கணிப்பு நிறுவன



மான ஜோக்பி இன்டர்னேஷனல் நிறுவனரும் தற்போதைய தலைவர்/தலைமை செயல் அதிகாரியுமான ஜான் ஜோக்பியின் கூற்றுப்படி, நியூ7ஒன்டர்ஸ் அறக்கட்டளை இதுவரை பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் மிகப் பெரிய கருத்துக்கணிப்பை நடத்தியிருக்கிறது.

இந்த திட்டம் பரவலான வீச்சில் அதிகார பூர்வ எதிர்வினைகளைப் பெற்றது. சில நாடுகள் தங்களின் இறுதித்தேர்வுக்குக் கூடுதலான வாக்குகள் சேகரிக்க பிரயத்தனப்பட்டன, ஏனையவை இந்தப் போட்டியை அலட்சியம் செய்தன அல்லது விமர்சித்தன. பரப்புரையின் தொடக்கத்தில் நியூ7ஒன்டர்ஸ் அறக்கட்டளைக்கு ஆதரவளித்து அதிசயங்கள் தேர்வு செய்வதில் ஆலோசனைகளை எல்லாம் வழங்கிய ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (யுனெஸ்கோ) 2007 இல் இந்த ஸ்தாபனத்தில் இருந்து தள்ளி நின்று கொண்டது.

கூடுதலான நினைவுச் சின்னங்கள் அவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இணைய தளங்கள் மூலம் அல்லது தேசிய இணைய தளங்களிலான வலிமையான ஆதரவு விளம்பரங்கள் மூலம்



ஆதரிக்கப்பட்டன. பல நாடுகளில் தேசிய தலைவர்களும் பிரபலங்களும் நியூ7ஒன்டர்ஸ் பரப்புரைக்கு ஊக்கமளித்தனர் . பதிவான வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்த வாக்காளர்களின் புவியியல் ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான பன்முகத் தன்மையைக் கொண்டு பார்த்தால், உலகளாவிய பேச்சு வார்த்தை மற்றும் கலாசார பரிவர்த்தனை என்னும் தனது நோக்கம் சாதிக்கப்பட்டிருப்பதைக் காண்பதாக நியூ7ஒன்டர்ஸ் தெரிவித்துள்ளது.

2001 இல் நிறுவப்பட்ட இந்த நியூ7ஒன்டர்ஸ் அறக்கட்டளை தனியார் நன்



கொடைகள் மற்றும் ஒளிபரப்பு உரிமைகள் ஆகியவற்றைக் கொண்டே இயங்கியது, எந்தப் பொதுப் பணத்தையோ அல்லது வரி செலுத்துவோர் பணத்தையோ ஏற்றுக் கொண்டதில்லை. முடிவு அறிவித்த பிறகு, இதன் மூலம் தமக்கு எந்த வருவாயும் கிட்டவில்லை என்றும் தனது முதலீடுகளையே ஓரளவுக்குத் தான் மீட்க முடிந்தது என்றும் நியூ7ஒன்டர்ஸ் தெரிவித்தது.

உலகின் புதிய ஏழு அதிசயங்களுக்



கான வாக்கெடுப்பை, மனிதகுல வரலாற்றில் முதலாவது உலகளாவிய ஜனநாயக நடைமுறை என்று அழைத்தார் நியூ7ஒன்டர்ஸ் அறக்கட்டளை தலைவரான பெர்னார்டு வெபர். 2007 இல் இயற்கையின் புதிய ஏழு அதிசயங்கள் New7 Wonders of Nature என்றழைக்கப்பட்ட இதே மாதிரியான ஒரு போட்டியை இந்த அறக்கட்டளை துவக்கியிருக்கிறது, தேர்வு விண்ணப்பங்கள் 2011 நவம்பர் 11 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. நியூ7 வோன்டர்ஸ் நகரங்கள் New7 Wonders Cities என்பது தற்போது நடைமுறையில் உள்ள திட்டம் ஆகும். இதற்கான வாக்கெடுப்பு ஜூலை 2014 வரை இடம்பெற்றது .

நியூ7ஒன்டர்சின் மைல்கற்கள் பக்கத்தின் படி , சுவிஸிலிருந்து இயங்கும் கனடா நாட்டவரான திரைப்பட இயக்குநர் மற்றும் விமான ஓட்டியான பெர்னார்டு வெபர் இந்த திட்டத்தை செப்ரெம்பர் 1999 இல் தொடங்கினார். இந்தத் திட்டத்தின் இணைய தளம் 2001 இல் தொடங்கப்பட்டது. கனடாவில் இருந்து இயங்கும் தளத்திற்கு வெபர் 700 தொகையை அளித்தார். இந்தப் புதிய பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்றால், அதிசயங்கள் மனிதனால் படைக்கப்பட்டதாய் இருக்க வேண்டும், 2000 ஆண்டுக்குள் முடிக்கப்பட்டதாக இருக்க வேண்டும், ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பாதுகாக்கப்பட்டு வருவதாக இருக்க வேண்டும். 2005 நவம்பர் 24



வரையில், 177 நினைவுச் சின்னங்கள் பரிசீலனைக்கு வந்தன. 2006 ஜனவரி 1 இல் இந்தப் பட்டியலில் இருந்து 21 தளங்கள் மட்டும் ஐந்து கண்டங்களில் இருந்தான உலகின் தலை சிறந்த கட்டடக்கலை நிபுணர்கள் ஆறு பேர், சாகா ஹதித், சீசர் பெல்லி, டடோ ஆன்டோ, ஹாரி சீட்லர், ஆசிஸ் டேயோப், யுங் ஹோ சாங், கொண்ட ஒரு குழு மற்றும் அதன் தலைவரான யுனெஸ்கோவின் முன்னாள் பணிப்பாளர் ஜெனரல் பேராசிரியர் பெட்ரிகோ மேயர் ஆகியோர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நியூ7ஒன்டர்ஸ் கூறியது. பிறகு உலகின் ஏழு பழைய அதிசயங்க



ளில் எஞ்சியிருப்பதான கிசா பிரமிடுகள் வாக்கெடுப்பில் இருந்து நீக்கப்பட்டு பட்டியல் 20 ஆகக் குறைக்கப்பட்டது, கிசா பிரமிடுக்கு மதிப்பார்ந்த நியூ7வொன்டர்ஸ் தகுதியாளர் என்ற கௌரவம் அளிக்கப்பட்டது.

சீனப் பெருஞ்சுவரின் விடாமுயற்சி, தாஜ் மஹாலுக்கு காதல், ஈஸ்டர் தீவு சிலைகளின் பிரமிப்பு என ஒவ்வொரு இறுதித் தேர்வுக்குமான காரணங்களை இந்த திட்டம் முடிவு செய்தது.

இடையில் 7 வெற்றிச் சின்னங்களையும், கூடுதலாக அக்ரோபோலிஸ், ஈஸ்டர் தீவு, மற்றும் ஈபிள் கோபுரம் இவற்றை அடக்கிய ஒரு முதல் 10 பட்டியல், புள்ளிகள்





கொண்டு வெளியிடப்பட்டது .

யுனெஸ்கோவின் முன்னாள் பணிப்பாளர் ஜெனரலான பெட்ரிகோ மேயர் திட்டத்தின் நிபுணர்குழுவில் தனிநபர் தலைவராக இருந்தார் . நியூ7 வொன்டர்ஸ் யுனெஸ்கோவுடன் தொடர்புடையதல்ல.

பரப்புரையின் அடிப்படை இலக்கு உலகளாவிய பரிமாற்றத்தையும் கலாச்சாரங்களுக்கு இடையிலான போற்றலை ஊக்கப்படுத்துவதும் ஆகும் என்று அமைப்பாளர்கள் தெரிவித்தனர். இது தவிர, உலக



நினைவு என்று நியூ7வொன்டர்ஸ் அழைப்பதான ஒன்றும் உருவாக்கப்பட்டது. இதன் பொருள் உலகமெங்கிலும் ஒவ்வொருவரும் நினைவில் கொண்டிருக்கும் பகிர்ந்து கொள்ளும் 7 விடயங்கள் என்பதாகும்.

உலகமறிந்த நினைவுச் சின்னங்கள் இடையிலான போட்டி, அதன் மீதான வருங்கால வாக்கெடுப்புகள், தொடர்பான வியாபாரங்கள், மற்றும் வாக்காளர் தரவுத்தள பயன்பாடு இவற்றில் இருந்து வரும் வருவாயின் ஒரு பகுதியை, உலகின் பல்வேறு மீட்சி திட்டங்களை உருவாக்க, அல்லது அவற்றுக்கு உதவ பயன்



படுத்துவதற்கும் நியூ7வொன்டர்ஸ் விரும்புகிறது. உலகின் தனித்துவமிக்க கலாசார பண்பாட்டு தளங்கள் குறித்த விழிப்புணர்வை வளர்ப்பது என்பது எப்போதும் நியூ7வொன்டர்சின் ஓர் இலக்காக இருந்து



வந்திருக்கிறது. இந்த உணர்வை வளர்ப்பது அதனளவிலேயே ஓர் அதிசயமாகத் திகழும் என்கின்றனர்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# நேர்காணல்

## Oshin Beauty Care அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் வக்சலா குணதாஸ உடனான நேர்காணல்.



நேர்கண்டவர் - திருமலை தட்சா

**எனது வாடிக்கையாளர்களின் திருப்தியே என்னை சாதனை நோக்கிய திசையில் முன்னேற்றியது!!**

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் வக்சலா குணதாஸ. Oshin Beauty Care என்ற பெயரில் அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். 2016 இல் வலயக்கல்வி அலுவலகத்தின் மூலமாக நடாத்தப்பட்ட செயலமர்வில் ஆரம்ப அழகுக் கலைப் பயிற்சியினைப் பெற்றேன். அதன் பின்னர் Blossum Beauty Care அழகுக்கலை நிறுவனத்தில் பணியாளராக இணைந்து இத்துறையில் மேலும் என்னை வளப்படுத்திக் கொண்டேன். தொடர்ச்சியாக Lotues Beauty care அழகுக்கலை நிறுவனத்தில் திருமதி.கல்யாணி கோணேஸ்வரனிடம் டிப்ளோமாவை முடித்து NVQ - 3 level இனைப் பூர்த்தி செய்து தரச்சான்றிதலைப் பெற்றேன். இப்போது மூன்று வருட காலமாக எனது Oshin Beauty Care அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன்.

**02) அழகுக் கலைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

வலயக்கல்வி அலுவலகத்தின் மூலமாக நடாத்தப்பட்ட செயலமர்வில் அழகுக் கலையினை கற்ற போது அங்கு நடைபெற்ற ஒப்படை போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட போது ஏதோ ஒரு சிறிய நம்பிக்கை என் மீது எனக்கு ஏற்பட்டது. அவ் நம்பிக்கையிலேயே என் அழகுக் கலைப் பயணத்தைத் தொடர ஆரம்பித்தேன். Blossum Beauty Care உரிமையாளரான மைதிலி சகோதரியிடம் பணியாளராக முதற்கட்ட சேவைப் பணியை ஆரம்பித்த போது அவர் என்னிடம் உன்னால் முடியும்! என்று அடிக்கடி கூறி மிகவும் ஊக்கமளித்தார். மேலும் அனைத்து விதமான அழகுக் கலை ஒப்பனை வேலைகளின் போது என்னையும் ஒரு பணியாளராக ஈடுபட இடமளித்தார். இவ்வாறாக அமையப் பெற்ற சந்தர்ப்பங்களின் மூலமாக இத்துறையினை மிகவும் ஆர்வத்தோடு முறையாக கற்றுக் கொண்டு தற்சமயம் இத்துறையில் பயணித்து வருகின்றேன். இதற்கு உறுதுணையாக எனது குடும்பம் இருந்து வருவதோடு எனது தந்தை மிக முக்கியமாக எனக்கு பக்கபலமாக இருந்து வருகின்றார் என்பதை நான் பெருமையாக கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**03) உங்களது அழகுக் கலை நிலையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்?**

2019ஆம் ஆண்டு முதல் இன்று வரை மூன்று வருட காலமாக Oshin Beauty Care என்ற பெயரில் எனது அழகுக்கலை நிலையத்தினை திருகோணமலையின் பாலையூற்று எனும் இடத்தில் நடாத்தி வருகின்றேன். எனது அழகுக் கலை நிலையத்தில் சருமப் பராமரிப்பு, கூந்தல் பராமரிப்பு மற்றும் மணப்பெண் அலங்காரம் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றேன்.

**04) இத் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி?**

காலப் பகுதிக்கு ஏற்றவாறும், வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறும் எனது சேவையினை முன்னெடுத்துச் செல்வது பெரிய சவாலாக உள்ளது.

**05) இத்துறையில் நீங்கள் அடைந்த சாதனைகள் பற்றி?**

குறுகிய காலப்பகுதியில் அழகுக் கலையை கற்று இடைப்பட்ட காலப்பகுதியில் பணியாளராக சேவையினைத் தொடர்ந்து பின் NVQ level இனை பூர்த்தி செய்து சித்தி பெற்று டிப்ளோமா தரச் சான்றிதழைப் பெற்று இன்று ஒரு அழகுக்கலை நிலையத்தின் உரிமையாளராக இச்சேவையினை முன்னெடுத்து வருவது என்னைப் பொறுத்தவரையில் எனது அடிப்படைச் சாதனையாகவே எண்ணுகின்றேன். மேலும், எனது வாடிக்கையாளர்களின் திருப்தியே என்னை இன்னும் இத் துறையில் சாதனை நோக்கிய திசையில் முன்னேற்றும் படிக்கற்களாகவே எண்ணுகின்றேன்.

**06) இன்று பல பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்ள பெரிதும் விரும்பி செயற்கை முறையில் முயற்சிக்கின்றனர். இவ்வாறான முயற்சி ஆரோக்கியமானதா? அதன் விளைவுகள் யாதாக இருக்கும்?**

செயற்கை முறையில் பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொள்வது என்பது ஆரோக்கியமற்ற விடயமாகவே தான் உள்ளது. காரணம் இன்று பல பெண்கள் மத்தியிலும் செயற்கை முறையிலான முகப் பூச்சுக்களை கொண்டு தங்களை அழகுபடுத்திக் கொள்வதை ஒரு சாதாரணமான விடயமாகவே கருதுகின்றனர். சந்தையில் கிடைக்கும் பல வகை முகப் பூச்சு வகைகளை ஆலோசனையின்றி பூசுவதால் பக்க விளைவுகளாக, கண்களைச் சுற்றி வீக்கம், வெள்ளை புள்ளிகள் மற்றும் கரும்புள்ளிகள், சிறிய சிவப்பு புடைப்புகள், பெரிய வலி மிகுந்த சிவப்பு கட்டிகள், முகப்பரு வடுக்கள், தோல் சிவத்தல், கொப்புளங்கள், தோல் புண்கள், படை நோய், உலர்ந்த செதில் தோல் வீக்கம், அரிப்பு, மென்மை தோல் அலர்ஜி என்று பல பிரச்சினைகள் ஏற்பட்டு பாதிப்படைய நேரிடும். ஆகவே பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள வேண்டும் என எண்ணும் போது ஒரு அழகுக் கலை நிபுணர் ஒருவரின் தக்க உதவியுடனும், முறையான ஆலோசனையுடனும் முன்னெடுத்து தங்களது அழகுத் தன்மையை பாதுகாப்பு மிக்க ஆரோக்கியத்துடன் பெற்றுக் கொள்ள முடியும்.

**07) அழகுத்துறை தவிர வேறு துறைகளில் உங்களது நாட்டம் பற்றி?**

Software computer & It academy மூலம் Office management course இனை பூர்த்தி செய்துள்ளேன். Diploma in aari embroidery கல்வி கற்க ஆரம்பித்துள்ளேன். மேலும் பல வகையான ஒப்பனைகள் சம்பந்தப்பட்ட கல்வியினைத் தேடித் தேடி பயின்று வருகிறேன்.

**08) திருகோணமலை மாவட்டத்தில் அழகுக் கலைத் துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்தில் அழகுக்கலை மீதான பார்வை பல போட்டிகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. காரணம் இத்துறையில் பெண்கள் ஆர்வத்தோடு பயின்று சுய தொழிலாக தற்சமயம் முன்னெடுத்து வருகின்றனர். ஆதலால் அழகுக் கலை மீதான பார்வை சிறப்பானதாகவே நோக்கப்படுகிறது.

**09) பெண்கள் தங்களது அழகை பாதுகாப்பான, இயற்கை முறையுடன் பின்பற்றுவதற்கு நீங்கள் கூறும் விடயங்கள் பற்றி?**

உங்கள் முகத்தை ஒரு நாளைக்கு இரண்டு முறை கழுவுங்கள், உங்கள் முகத்தை மெதுவாக, மென்மையாக மசாஜ் செய்யவும்.

அதிகளவான தண்ணீரினை அருந்தவும்.

முகக் கவசத்தை தவறாமல் பயன்படுத்தவும்.

போதுமான அளவு ஓய்வெடுத்து நிம்மதியாக உறங்கவும்.

**10) இத்துறை மூலமாக உங்களுக்கு கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கின்றதா?**

ஆம், வாடிக்கையாளரின் திருப்தியே எனக்கு மிகவும் திருப்தியளிக்கின்றது.

**11) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

எந்தவொரு துறையைத் தேர்ந்தெடுத்தாலும் அத்துறையானது மிகவும் சவால்கள் நிறைந்ததாகவே காணப்படும். ஆகவே தளர்ந்து விடாமல் அச் சவால்களை தகர்த்தெறிந்து நமக்கான வழியை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெற்றிகள் நம்மை தேடி வரும் என்று நாம் அசாதாரணமாக இருக்காமல் நமக்கான வெற்றிப் பாதையினை நம் பயணத்தின் மூலமாக நேர்த்தியான வழியில் அடைவதே சிறந்தது.

# காற்று கனக்கும் தீவு

சிறுகதை

திருக்கோவில் கவியுவன்

வியர்வை அரும்பிய கன்னத் சேலைத்தலைப்பினால் துடைத்தபடி, வெற்றிலைத்தட்டுடன் முற்றத்திற்கு வந்த ராசம்மாவின் முகத்திலறைவது போல் வீசியது காற்று. வெண்மணலில் நிலா காய் ந்துகொண்டிருந்தது. ஏழோ? எட்டோ? எத்தனையாம் பிறையென்று தெரியவில்லை. அது எத்தனையாய் இருந்தால் அவளுக்கென்ன? நிலா வானில் தோன்றி அவளுக்குச் சந்தோசத்தையா கொடுக்கப் போகிறது. அது ஒரு காலம், எட்டுப் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் புடைசூழ ‘ணங்கு ணங்கு’ என்று வெற்றி லையை இடித்து கணபதியாரின் கையில் கொட்டியபடி நிலவில் இருந்ததெல்லாம் ஒரு காலம். இப்போது நிலவைப் பார்த்து என்ன ஆகப் போகிறது. வீணே மனதில் வலியை வாங்கிக் கொள்வதுதான் மிச்சம்.

‘இப்பிடி ஒரு வளர்பிறையிலதானே சாந்தன் வீட்ட விட்டுப் போனவன். கடசிப் போக்கு. அப்பவும் இப்பிடித் தானே காற்று தாலாட்டுற மாதிரி வீசிக்கொண்டிருந்தது. கடக்குட்டி துடுக்கன். வீம்புக்காரன். எவ்வளவு பேர் சொல்லியும் கேட்டவனோ, கடதாசிப்பைக்குள்ள ரெண்டு சேட்டையும் ரெண்டு சாரத்தையும் சுற்றியெடுத்துக் கொண்டு. “கண்ணா, அடிவாங்காமச் சாப்பிடு பாப்பம்’ குசினியின் உள்ளிருந்து கமலத்தின் கோபமான குரல் கேட்கிறது. கூடவே கண்ணனின் சிணுங்கல் சத்தம், ராசம்மாவிற்கு புரிந்து விட்டது. கண்ணன் அடம் பிடிக்கத் தொடங்கி விட்டான். இனி அவள் போனால்தான் அவனை அரவணைத்து அழுகையை நிறுத்த முடியும். ‘என்ன பிள்ள அது’ எழுந்து சேலையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டு மகளை விளித்தபடியே குசினிக்குள் நுழைகிறாள். ‘பாரம்மா, சாப்பிடச் சொன்னா, குட்டி மாமாவக் காட்டு, குட்டிமாமாவாக் காட்டு எண்டு நிக்கிறான். ஒவ்வொரு நாளும் இவனோட இதே கரைச்சலாக்கிடக்கு. இண்டைக்கு அடிவாங்கித்தான் சாப்பிடப் போறான்’, கமலத்தின் குரல் கசிந்து போகிறது. நீர்முட்டிய விழிகளுடன் குனிந்தபடியே பதில் சொல்கிறாள். இருக்காதா பின்ன? பிள்ளை மாதிரி வளர்த்தவன் அல்லவா. ‘இஞ்செகொண்டா, நான் அவனுக்கு தீத்திவிடுறன். கண்ணா, வாடா குஞ்சு, அம்மம்மாவும் கண்ணாக் குட்டியும் கத சொல்லிச் சொல்லி சாப்பிடுவம் என்ன? ராசம்மாவிடம் ஓடிவருகிறான் கண்ணன். அழுகை திடீரென நின்றுவிடுகிறது. ராசம்மா கதை சொல்லப் போகிறாள் என்றவுடன் மண்டபத்திற்குள்ளே படித்துக் கொண்டிருந்த பிரியாவும், சாந்தியும், மாறனும் முற்றத்திற்கு வந்துவிட்டார்கள். அவள் இங்கே கதை சொல்லும்போது அவர்கள் அங்கே எதைப்படிப்பது கண்ணனின் அழுகையில் கிடைக்கும் சந்தோசத்தில் அவர்களுக்கும் பங்கு. ‘அம்மம்மா, அம்மம்மா பேய்க்கதை சொல்லுங்கோ அம்மம்மா, ‘மாறன் அவளின் கையைப் பிடித்துக் கொள்கிறான். அவளுக்கு பேய்க்கதை சொல்வதில் அதிகம் விருப்பமில்லை. ‘பேய்க்கதை வேணாம். சங்கிலியன் கதை சொல்றன் என்ன? ‘அதென்னத்துக்கு, எத்தினி தரம் அதக்கேக்கிறது’ குழந்தைகளெல்லாம் ஏகோபித்த குரலில் முணுமுணுத்தன. ‘அப்படியெண்டா, குள்ள நரிக்கத சொல்றன் என்ன’

ஐயோ அதுவும் வேணாம் அம்மம்மா ‘கீ’அப்ப என்ன கத சொல்ற. ம். ம்..ம் ஒரு கதயும் ஞாபகம் வருகுதில்ல.

‘இல்ல. இல்ல இரிக்கிநிறையக் கதயிரிக்கி. நான் உங்களிட்டச் சொல்லாத இன்னம் எத்தினையோ கதயிரிக்கி. நான் இப்ப சொல்லப் போற கதய கவனமாய்க் கேக்கோணும் என்ன? கேட்டுக்கேட்டு கண்ணாக்குட்டி சாப்பிட்டு முடிக்கோணும் என்ன கண்ணனுக்கு உணவை ஊட்டியபடியே அவள் கதை சொல்லத் தொடங்கினாள்.

அந்த வனம் தன் எழில் இழந்து போய் எத்தனையோ வருடங்கள் ஆயிற்று. நாற்புறம் கடல் சூழ தனித்த தீவாய் அழகுற விளங்கிய அவ்வனத்தில் இன்று பச்சைப் பசேலென்று எதுவுமே தெரியவில்லை. சடைத்து விரிந்த மருதமரங்களாலும், பூத்துக் குலுங்கும் கொன்றை மரங்களாலும், குளிர்ந்தபடி சிற்றோடைகள் ஓடிய இடங்களெல்லாம் பாளம் பாளமாய் வெடித்துக்கிடக்கின்றன. குயில்கள் கூவும் சத்தமும் மயில்கள் அகவும் சத்தமும் கோழிகள் கீச்சிடும் சத்தமும் கேட்டு எவ்வளவோ காலமாயிற்று. மயானத்தின் அமைதி கொண்ட அக் கொதி மணல் வெளிகளிலே இப்போது கேட்பதெல்லாம் ஓயாது இரையும் சமுத்திரத்தின் இரைச்சல் மட்டுமே, காற்றுக்குக் கூட பெரிய துக்கம் தன்னை உசுப்பிவிட யாருமே இல்லையென்று. அது தன் கடைசிச் சேவையாய், ஒரு நாள் சீற்றம் கொண்டெழுந்து வனம் முழுவதும் பரவிக்கிடந்த இலை சருகுகளையும் உதிர்ந்து கிடந்த சிறகுகளையும் அள்ளிக் கொண்டு எங்கோ எறிந்துவிட்டு, அந்த வனம் முழுவதும் சுழன்று சுழன்று வீசியதுடன் மௌனித்துக் கொண்டது. பின்னெப்போதோவது பௌர்ணமி நாட்களிலோ, அமாவாசை நாள்களிலோ நடந்து முடிந்தவைகள் பற்றிய துக்கம் நெருட எழுந்து, இன்னும் அவ்வனத்தில் குத்திட்டு நிற்கும் பாறைகளிடம் போய் அழுது புலம்பிவிட்டு வருவதுடன் சரி. அவ்வனத்தில் நிகழ்ந்த அத்தனை கொடுமைகளையும் பார்த்து விட்டு இன்னுமுயிரோடிருக்கும் இரண்டாவது நபர் இந்தப் பாறைகள்தான். கொடிய கழுகிற்கு தாம் புகலிடம் வழங்கியமைக்காக அது எப்போதே உருகி உருகிக் கரைந்திருக்க வேண்டும். ஆனால் அது கரையவில்லை. அது இன்னமும் கரையாம்ல் இருப்பதால்தான் காற்று அதனிடம் சென்று குத்திக் காட்டி அழுதுவிட்டு வருகிறதோ தெரியவில்லை. காற்று, பாறை இந்த இரண்டையும் தவிர அங்கே நிகழ்ந்ததையெல்லாம் பார்த்த மூன்றாவது நபர் ஒருத்தர் உள்ளாரெனின், அது ஓயாது இரையும் நமது சமுத்ராதேவிதான். இத்தனை கொடுமைகள் நிகழ்ந்த அவ்வனத்தை இன்னும் ஏன் சமுத்திரம் அடித்துச் செல்லாமல் இருக்கின்றது என்பது தான் இன்னமும் ஆச்சரியமாய் உள்ளது. ஒரு வேளை எப்போதேனும், எதற்கேனும் அத்தீவிற்கு அல்லது வனத்திற்கு வருபவர்கள் அங்கே நிகழ்ந்த கொடுமையினை அறிய வேண்டும் என்பதற்குச் சான்றாய் அதை விட்டு வைத்திருக்கிறதோ? அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். நாளை, அத்தீவில் அல்லது வனத்தில் ஆராய்ச்சி செய்பவன், எங்கேயாவது பாறை இடுக்குகளில் பொருதிக் கிடக்கும் அக்கொடிய கழுகின் எலும்புக் கூடுகளையாவது எடுத்துக் கொள்ளட்டும்.

உச்சி வெயிலுக்கு பாறைச்சூடு கூட்டையும் தாண்டி உடலினில் பரவ சலிப்புடன் எழுந்து கொண்டது கழுகு. வெம்மையைத் தணிக்க காற்று வீசாததால் ஒரே புழுக்கமாயிருந்தது அதற்கு. கொடிய வெயில் பாறையை உருக்கி திரவமாய் வழிய வைப்பதற்கு முயற்சிப்பது போல் கொடிய வெயில். ஊதாப்பூக்கள் கருகிக் கிடந்தன. வரவர தளர்ந்து வரும் தன்னுடலைச் சிலிர்த்தபடி ஒரு தரம் கண்களை சுழல விட்டது கழுகு. இறகுகள் சுற்றிவர இறைந்து கிடந்தன. பசிப்பது போலிருந்தது. இருந்தும் இரை தேடச்செல்வது அலுப்பாக இருந்தது. ஒரு கோழிக் குஞ்சுக்காகவோ அல்லது இரு கோழிக் குஞ்சுக்காவோ அலைந்து திரிவதிலெல்லாம் அதற்கு இப்போது இஷ்டமில்லை. ஒரே தாவலில் ஐம்பது நூறாய் காலில் இடுக்கிக் கொண்டு வருவதென்றால் எவ்வளவு சந்தோஷம். அதை விட்டு, இப்பிடி ஒன்றாயும், ரெண்டாயும், சமயங்களில் எதுவுமே இல்லாலம களைத்து.க்சே சலிப்பை பசி வென்றுகொள்ள பாறையோடு சேர்ந்திருக்கும் மருத மரத்தின் உச்சாணிக் கொப்பிற்கு சிறகை விரித்தது. மஞ்சள் வெயிலை கீசிறகடிப்பதில் சிதறடிப்பதுபோல் வேகம். பூமியில் மட்டுமென்ன வானத்திலேனும் கூட்டம் கூட்டமாய் இரை தென்படுகின்றதா என்பதாய் பார்வை. தூங்கிக் கிடந்த இலைகளெல்லாம் கழுகின் சிறகடிப்பில் காற்றை உசுப்பத் தொடங்கின. ஏதோ ஒரு கோழிக் குஞ்சின் மரணத்திற்காகப் பரிதாபப்பட்டது மரம். தன்னைத் தனக்குள்ளேயே குறுக்கிக் கொள்ளமுடியாது உச்சாணிக் கொப்பு சங்கடமாய் நெளிந்தது. தூரங்களை ஊடறுக்கும் பார்வையுடன் உச்சாணிக் கொப்பில் வந்த மர்ந்தது கழுகு. பழுத்த இலைகள் உதிர்ந்தன. கொப்பு ஒருதரம் குலுங்கி மீண்டது. எழுபத்தியிரு திசைகளிலும் அதன் பார்வை திரும்பிற்று. மரங்களையும், குன்றுகளையும், முள்ளடர்ந்த புதர்களையும் தாண்டி பார்வை விரைந்தது. வெயிலின் எறிப்புக்கு காய்ந்து போன கம்பு செடிகளும், முள்ளுதிர்ந்த மிலாறுகளும் ஒளி தெறித்த பாறைகளுமே தெரிந்தன. ஒரு கோழிதானும் தென்படவில்லை. நேரம் செல்லச் செல்ல கழுகுக்கு பசி அதிகமாகியது. சிறகுடலை பெருங்குடல் விழுங்கிவிடுவது போலான வலி, பசி அதிகமாக அதிகமாக கொழுத்த கோழி இல்லையெனினும் ஒரு கோழிக்குஞ்சாவது கிடைக்காதா என அதன் பார்வை கூர்மையடைந்தது. இப்படிப்பார்ப்பது அதற்கு வெட்கத்திற்குரியது போல் தோன்றியது. வெண்பஞ்சாய் இறகுகள் உதிர உதிர, மழைத்துளியாய் குருதி வடிய வடிய காலிடுக்கில் நிறைய குஞ்சுகளையும் கோழிகளையும் சுமந்து வரும் நாட்கள் ஞாபகத்தில் வந்தன. இந்த ஞாபகங்கள் வரும்போதெல்லாம் கூடவே அந்த வெண்புறாவின் ஞாபகமும் வரும். வெண்புறாவானில் சிறகடிக்குமந்த ஓரிருநாட்களிலும் தான்இரையெதையும் கௌவிக்கொள்ள முடியாதென்றாலும் வெண்புறா காயம் பட்டுக்கொண்டு வந்த வேகத்திலேயே திரும்பிப் போனபின் தனக்குக் கிடைக்கும் கொழுத்த வேட்டைக்காக அது ஏங்கிக் கிடக்கும். இயல்பில் அது தனக்கு எதிரியென்றாலும் இவ்விடயத்தில் மட்டும் உதவி செய்வதாகவே தோன்றும். மற்றும்படி வெண்புறா அதற்கு எப்போதும் எதிரி தான். தன்னைத் தடவிப் பறக்க விடும் வனதேவதையின் கைகளே வெண் புறாவையும் தடவிப்பறக்க விடுவதையிட்டு கழுகுக்கு மிகுந்த கோபம்.

அத்தகைய நாள்களில் தான் இரையெதனையும் கௌவிக் கொள்ள முடியாது கால்கள் கட்டப்படுவதையிட்டும் தீராத எரிச்சல். எனினும் உச்சாணிக் கொப்பிற்கு மட்டும் பறப்பதற்கும் அங்கிருந்தபடியே இரைகளை நோட்டம் விடுவதற்கும் அனுமதித்திருப்பதையிட்டு கொஞ்சம் திருப்தி, கலக்க முகத்துடன் கழுகு வாடிக்கிடக்கையில் திடீரென்று ஒருநள்ளிரவில் அதன் முன் வனதேவதை தோன்றும், கழுகை மடியினுள் போட்டுக் கொண்டு செட்டைகளைதடவியபடி ஆறுதல் கூறும். வெண்புறாவில் தனக்கு அதிகம் விருப்பம் இல்லையென்றும், கழுகில் தான் அதிகம் விருப்பு என்றும், எனினும் களைத்துப் போன கழுகிற்கு ஓய்வு தேவையென்றும் அதனால்தான் வெண்புறாவை பறக்கவிட்டிருக்கிறேன் என்றும் கூறும். வனதேவதையின் மடியில் படுத்தபடியே கழுகு பல சந்தேகங்களை கேட்கும். சிலவற்றை நம்பாது சத்தியம் செய்யும்படி கோரும், கழுகு கேட்ட சத்தியத்தையெல்லாம் கொடுத்துவிட்டு வனதேவதை மறைந்துபோகும். மறையுமுன்தான் வந்தது பற்றி வெளியில் தெரியக்கூடாதென எச்சரித்துச் செல்லும். அதன்பின் தென்றல் வருடும் மாலை நேரங்களிலும், பணிவிழும் இரவுகளிலும் மென்மையாய் தூக்கம் தொடும் போதெல்லாம் கனவில் மிதக்கும் கழுகு, மரண வேதனையில் கோழிகள் அலறுவதாயும், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு புதர்களிடையே அவை ஒடி ஒளிவதாயும், இழந்த கோழிக்காக குஞ்சுகளும், குஞ்சுக்காக கோழிகளும் அழுவதாயும் காட்சிகள். எழுந்து உட்கார்ந்து பாறை வெடிப்பது போல சிரிக்கும். கொப்பிற்கும் கூட்டிற்குமாய் மாறி மாறிபறக்கும். பசியெல்லாம் பறந்து விட்டநிலையில் பாடவும் தொடங்கும். காற்றை வீசியே வெண்புறாவின் சிறகை ஒடிப்பது போல் எண்ணும், வனதேவதை யின் மடியினில் படுக்கும் போது கிடைக்கும் சுகம்பற்றி மீட்டுப் பார்க்கும். எதையெல்லாம் செய்தால் வனதேவதையை இன்னும் குளிரப் பண்ணலாம் என்று தீவிரமாய் சிந்திக்கும். வெண்புறாவைப் பற்றிக் கேலியாய் புன்னகைக்கும். இப்போதும் பசி மயக்கத்துடனே, வெண்புறா இனி எப்போது வரும் என்று கழுகு ஏங்கலாயிற்று.

நிலா மெதுவாயெழும் பின்னிரவொன்றில், அதனொளியில் காயப்பட்டுப் போனதன் சிறகுகளைப் பார்த்தபடி நலிந்து கிடந்தது வெண்புறா, சுவரில்லாத பாழ் மண்டபத்தினுள் தடையில்லாது வந்த நிலாக் கிரணங்களில் அதன் தங்கக்கூடு மிக அழகாய் மின்னித் தெறித்தது. புதிதாய் முளைத்த சிறகுகள் கூட அதன் ஒளியில் வெண்மை பரப்பி விரிந்து கிடந்தன. மூடியும் மூடாது கிடந்த சிறகினூடு காற்றுப் புகுந்து உள் நரம்புகளையெல்லாம் சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தது. இருந்தும் மனதளவில் அது மிகவும் விசனப்பட்டுப் போயிருந்தது. நீண்ட நாட்களாக தான் அந்தக் தங்கக் கூட்டினுள்ளே அடைபட்டுக் கிடப்பது எதற்காக என்று யோசித்துக்கொண்டது. பதில் தெரியாமல் பெருமூச்சு விட்டது.

ஒருவேளை அடிக்கடி ஒடிக்கப்படும் தன் சிறகுகள் முளைக்கும் வரை கூண்டினுள் இருக்கிறோமா? என்று எண்ணிக் கொண்டது. சிறகு ஒடிக்கப்படுவது பற்றியும், பின் அது மீண்டும் மீண்டும் வளர்வது பற்றியும் நினைக்கும் போதே அதற்கு ஒரு கேலிச்சிரிப்பு பிறந்தது. அதைவிட, தான் வானில் சிறகடிக்கும் போதெல்லாம் ஆனந்தக் கூச்சலிடும் கோழிகளை எண்ணிப் பார்த்துஇன்னும் சிரித்துக் கொண்டது. வெளியே தெரியாத மயிர் போன்ற இழையினால் தன் கால்களைக் கட்டியபடியே பறக்க விடும் வனதேவதையை வாழ்த்தி கோழிகள் படையல் வைப்பதை எண்ணி இன்னும் இன்னும் சிரித்துக் கொண்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# காற்று கனக்கும் ......

சிரிக்கும் போதும் அந்தக் கோழிகளுக்காக அதன் மனமிரக்கப்பட்டது. தனக்காகவும் அதன் மனமிரக்கப்பட்டது. கடைசியாய் தான் பறந்த போது, காலொடிந்த அந்தப் புள்ளிக்கோழி வருத்தத்துடனேயே கூறியவைகளை எண்ணிப் பார்த்தது. 'சே என்ன உருக்கமாய்த் தான் அந்தப் புள்ளிக்கோழி தன் கதையை சொல்லிற்று. 'ஓ வெண்புறாவே, என்னால் உன்போல் பறக்க முடியவில்லை. என்னினத்தவரைப் போல் அதிக தூரம் நடக்கவும் முடியவில்லை. தானியங்களைப் பொறுக்குவது கூட மிகச் சிரமமாக இருக்கிறது. என் காலொடிந்த காலத்திலிருந்தே கண்கள் இருண்டுபோனது போல் உணர்கிறேன்.

என் குஞ்சுகள் இருந்தாலும் பரவாயில்லை. அவையாவது ஏதேனும் தானியங்களை பொறுக்கி வந்து ஊட்டி விடக்கூடும். அவைகூட கொடிய கழுகின் காலிடுக்கில் உயிரை மாய்த்துக் கொண்டன. எஞ்சிய ஒன்றிரண்டும் கழுகிற்கு பயந்து தூர தேசமாய் போய்விட்டன.

அவைபற்றிய கவலை இன்னும் என்னை வாட்டுகிறது. நீ வரும் போதெல்லாம் தூரமாய்ப் போன அவைகள் திரும்பி வருமா என மகிழ்வுறும் போது நீ சொல்லிக் கொள்ளாமலேயே மறைந்து போகின்றாய். எனவே அவைகளை மீண்டும் நான் காண்பேன் எனும் நம்பிக்கை என்னை விட்டுப் போய்விட்டது. இனி நான் வாழ்வதிலும் ஏதும் அர்த்தம் இருப்பதாய்த் தெரியவில்லை.

எப்போதுமே இந்தப் புதர்களிடையே - வானத்தையும், வெள்ளிகளையும் மேகக் காட்டுக்குள் ஒளிந்து விளையாடும் நிலாவையும், கரும் ராட்சசனாய் விரிந்து வரும் கழுகினையும் பார்த்தலில் எனக்கு சலித்து விட்டது. ஆகையினால் என்னை எங்காவது அழைத்துச் செல். அன்றொருநாள் ஒரு கனாக் கண்டேன். இந்தப் பூமிக்குக் கீழே அழகியதோர் உலகமிருப்பது தெரிந்தது. அங்கே கண்ணாடியுடம்பினையுடைய பறவை என்று சொல்லத்தக்க ஓரினம் காற்றுவெளியில் மிதந்து செல்கின்றன. எதுவும் எதன் மீதும் முட்டிக் கொள்ளவில்லை, மோதிக் கொள்ளவில்லை. எதுவும் எதனையும் கட்டிப் போடவில்லை. புன்னகை கூட இதய ஆழத்திலிருந்து வருவது போல்தான் தோன்றிற்று. அங்கே என்னை அழைத்துச் செல். அது உனக்குச் சிரமமென்றால் வேறோர் நாள் பிறிதோர் கனாக் கண்டேன். அதிலே, இந்தப் பூமியிலே எங்கோ ஓரிடத்தில் அழகியதோர் நந்தவனமிருப்பது தெரிந்தது. அங்கே நறுமணம் கமழும் காட்டுப் பூக்களும், தீங்கற்ற சிறுபிராணிகளும், மென்மையான அலகிற்குரிய சிறு பறவைகளும் மட்டுமே தெரிந்தன. ரத்த வாடைக்காக எச்சில் ஒழுக ஒழுக அலைந்து திரியும் எந்தப் பிராணியும் தென்படவில்லை.

கீசிறு அட்டை கூட இருக்காதென்றே நம்புகிறேன். அங்கேயாவது என்னை அழைத்துச் செல். எங்கள் வனதேவதை மழையைத் தருவித்து எங்கள் சிறுகுகளிலும் காலிடுக்குகளிலும் புதர்களிலும் ஒட்டியிருக்கும் ரத்தக் கறையைக் கழுவிவிடும் என்று பார்த்துப் பார்த்தே காலம் ஓடிவிட்டது. தொடராய் வரும் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகிப் போனதில் நொந்து போன அப்புள்ளிக் கோழியின் வருத்தங்கள் பற்றி மனம் கசிந்து கொண்டது வெண்புறா. இக்கணத்தில் அப்புள்ளிக்கோழி என்ன செய்து கொண்டிருக்கும் என்று யோசித்துக் கொண்டது. இப்போதும் அது கனாக்கண்டு கொண்டிருக்கும். அல்லது விந்தி விந்தி எங்கேயேனும் எதையேனும் கொறிக்கவும் போயிருக்கும். சிவவேளை எதுவுமே செய்யாமல் கழுகின் வயிற்றினுள் ஜீரணமாயுமிருக்கலாம். கூண்டை உடைத்துச் சென்று வனதேவதையின் கண்களை கொத்தி விடுவோமா என்றெண்ணியது. எழுந்து சிறகை விரித்து கூண்டுக் கம்பிகளில் மோதி விழுந்தது. பிறகு படுத்துக் கொண்டது. மீண்டும் எழுந்து சிறகை விரித்துக் கூண்டுக் கம்பிகளில் மோதி விழுந்தது. பிறகு நீண்ட பெரிய மேகக் கூட்டமொன்றினுள் நிலா புகுந்து கொள்ள வெண்புறாவும் இருட்டில் சோர்வுடன் படுத்துக்கொண்டது.

நாளுக்கு ஒன்றாயும் ரெண்டாயும் தம்மைக் கழுகுக்கு அர்ப்பணித்துக் கொண்டு கோழிகள் புதரிடையே பதுங்கியும், வயிறு பசிக்கும் போது வெளிவந்தும் வாழ்வைப் பழக்கிக் கொண்டு வெண்புறாவை மறந்திருந்த நிலையில் திடீரென அவைகளிடையே ஒரு மெல்லிய சலசலப்புக் கிளம்பிற்று. கழுகு கண்ணுறங்கும் இராப் பொழுதுகளிலும், கூதலுக்காக அது கொடுகிப் படுத்திருக்கக் கூடிய மழை நேரங்களிலும் அடர்ந்த மருத மரங்களின் கீழ் அவை கூடிக் கூடிக் கதைத்தன.

வனத்துக்குப் புதிய வனதேவதை வரப்போவதாயும் அப்படி வந்தால் அன்றுடன் தமதின்னல்களெல்லாம் நீங்கிவிடும் என்றும் புதிதாய் வரப்போகும் வனவேதை இப்போது வெண்புறாவைத் தேடித்தான் போய்க் கொண்டிருப்பதாயும், அதற்கு எப்போதுமே கழுகை பிடிப்பதில்லையென்றும், ஒருசமயம் அதன் சுட்டுவிரலைக் கூட கழுகு கொத்திற்றுப் போயிருக்கிறதென்றும் அதிகமாய் ஊர்மேயும் சிவப்புச் சேவல் சொல்லிற்று. பொழியும் மழையில் தங்கம் விழுவது போல் அனேக கோழிகளின் கண்கள் அகல விரிந்தன. 'வருகிற வனதேவதை சிறிது முன்னமே வந்திருக்கக் கூடாதா என் குஞ்சு பிழைத்திருக்குமே' என ஆதங்கப்பட்டதொரு கோழி, கன்னம் ஈரலித்தபடியே. 'வருகிற வனதேவதைக்கு இப்போதே படையல் வைப்போம்' என்றதொரு குஞ்சுக்கோழி

'கொஞ்சம் பொறுங்கள். படையலைப் பிறகு பார்ப்போம், முதலில் நமக்கிருக்கும் பாடும் உரிமையைக் கொண்டு பாடி பழைய வன தேவதையை அனுப்பி வைத்து புதிய தேவதையை வரவழைப்போம்' என்றது ஊர்மேயும் சிவப்புச் சேவல், 'ஓம் பாடுவோம், பாடுவோம்' என்று உரக்கக் கத்தின மற்றக் கோழிகள், 'ஏனிப்படி அவசரம், கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமே' என்றது காலொடிந்த புள்ளிக்கோழி.

அதன் கண்களில் நம்பிக்கைக்கான எந்த அடையாளமும் தெரியவில்லை. முன்போல், வெண்புறா வரப்போகிறது என்றவுடன் தூரமாய்ப் போன தன் குஞ்சுகள் திரும்பி வருமா என்ற கேள்வியெல்லாம் அதனுள் எழவில்லை. பிறக்காத குழந்தை எப்படியிருக்கும் என்று எங்ங்ணம் சொல்ல முடியாதோ அங்ஙனமே இன்னும் வராத வனதேவதை பற்றி எதுவும் எதிர்பார்க்க அது விரும்பவில்லை. மற்றக்கோழிகளெல்லாம் புள்ளிக் கோழி மீது ஒரு வினோதப் பார்வையை வீசின. சிலவற்றின் பார்வையில் வெறுப்பு மிஞ்சிக் கிடந்தது. அவையெல்லாம், புதிய வனதேவதை பற்றி சிவப்புச் சேவல் சொல்லிய வைகளைக் கேட்டுக் கேட்டு கனவுகளை வளர்த்துக் கொண்டு விட்டன. தம் புதர்களுக்கு ஒளி கொடுக்க நட்சத்திரங்கள் இறங்கிவர இருப்பதாகவும், மட்டுப்படுத்திய தம் பறத்தல்கள் இனிமேல் கட்டுக்கடங்காது போகுமென்றும், எங்கும் எந்தவேளையிலும் தாம் இனி கீஇரைதேடப் போக முடியுமென்றும் இரைகிடைக்காது போயின் கூட வனதேவதை தம்புதர்களுக்கு மூடை மூடையாகத் தானியங்களை இறைஞ்சி விடுமென்றும் அவற்றின் கனவுகள் விரிந்தன. ஆதலால் அவைகள் புள்ளிக் கோழியை சத்தமில்லாது வைதன. இன்னும் சில பெரிதாய் கூச்சல் போட்டன. 'சரி சத்தத்தை நிறுத்துங்கள் இங்கே வாதம் செய்து நேரத்தை வீணடிப்பதை விட நாம் பாடிப்பாடி புதிய தேவதையை வரவழைப்போம்' என்று மற்றக்கோழிகளை அடக்கியது சிவப்புச் சேவல், மந்திரத்துக்குக் கண்டுண்ட தாய் அனேக கோழிகள் உடன் மௌனமாகின.

பின் அவையெல்லாம் வனதேவதையை வரவழைக்கும் பாடலை உரத்துப்பாடிக்கொண்டு வனத்தின் மூலை முடுக்கெல்லாம் பவனி வரத் தொடங்கின. ஆங்காங்கு புதர்களில் இருந்து வேறும் பல கோழிகள் இணைந்து பவனி பெருக்கத் தொடங்கிற்று. எங்கும் போகாது இருந்து இடத்தில் உட்கார்ந்தபடியே தன் கனவுகளை மீட்டுக்கொண்டிருந்தது காலொடிந்த புள்ளிக் கோழி,

பனிப்பூக்கள் நுனிப்புல்லை மறக்கத் தொடங்கும் காலைப் பொழுது. வசந்தம் பூப்பதற்காக விரிந்து கொண்டிருந்தன காட்டுப்பூக்கள். ஓடிக்கொண்டிருந்த சிற்றோடை அமைதியாய்க் கிடந்தது. எங்கோ மையம் கொண்டு உட்கார்ந்திருந்தது காற்று.

நீண்ட, பரந்த அந்தப் புல் வெளியில் ஏறுவெயிலைத் தாங்கியபடி குழுமியிருந்தன கோழிகளெல்லாம். யாவற்றின் கண்களும் நெடிதுயர்ந்த மரங்களுக்கப்பால் மேகக் கூட்டங்களை கிழித்தபடி பொருதிக் கிடந்தன. எக்கணத்திலும் மேகத்தைக் கிழித்துக்கொண்டு புதிய வனதேவதைகள் தங்கள் முன் தோன்றலாம் என்ற ஆவல் அக்கண்களில் நிரம்பியிருந்தன. அவற்றின் மனங்களோ தம் பாடும் உரிமையைக் கொண்டு பழைய வனதேவதையை அகற்றிவிட்டது பற்றியும், புதிய தேவதையை வரவழைத்துக்கொண்டது பற்றியம் எண்ணி எண்ணி நெகிழ்ந்து கிடந்தன. வனதேவதை வரும் வழியில் பார்வைக்கு குளிர்ச்சியாக தம் இறகுகளை பிடுங்கி வண்ணம் தோய்த்து மிதக்க விட்டிருந்தன. காதுக்கு இனிமையாக குயில்களை அழைத்து கச்சேரி வேறு. புல்வெளியின் ஓரத்தில் தேவதைக்கு படையல் வைக்க அவிப்பொருளும் அவிந்து கொண்டிருந்தது. யாவற்றையும் மேற்பார்வை செய்தபடி தலையாரிபோல் வீறுநடை போட்டுக்கொண்டிருந்தது சிவப்புச் சேவல், பசியால் வெகுண்ட குஞ்சுகள் தாய்க்கோழிகளின் செட்டைகளை கொத்தியபடியிருந்தன.

வானம் நிர்மலமாய்க் கிடந்தது. எத்திசையிலும் மேகத்தில் வெடிப்பு விழுவதாகவோ ஒளி வட்டம் தோன்றுவதாகவோ தெரியவில்லை. பசியின் கோரத்தில் குஞ்சுகள் இரையற்ற தரையை கொத்தி கொத்தி தம் அலகுகளைத் தேய்த்துக் கொண்டன. தாய்க்கோழிகள் விம்மின, வெதும்பின, தத்தமக்குள் முனகின. சிறு சிறு குழுக்களாய் சேர்ந்து கொண்டு தம் அங்கலாய்ப்புகளை பங்கிட்டுக் கொண்டன. வனதேவதை தம் முன் தோன்றியவுடன் எல்லாம் சரிவரும் என்று நம்பின. சிவப்புச் சேவல் அண்மித்து வரும் போதெல்லாம் மௌனம் காத்தன. திடீரென்று எங்கும் இருட்டு, சூரியனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. கோழிகள் குய்யோ முறையோ என்று கத்தியபடி ஓடித்திரிந்தன. ஒன்றில் ஒன்று முட்டிக் கொண்டன, மோதிக் கொண்டன. முடிவற்ற தூரத்தில் இருந்து ஒரு நீலநிறக்கதிர் நீண்டு வந்தது. நேரே சிவப்புச் சேவலின் மீது விழுந்தது. காந்தம் இரும்பினை அப்பிக் கொள்வது போல், கைசொடுக்கும் நேரத்தில் சிவப்புச் சேவலை அப்பிக்கொண்டு அக்கதிர் மேகத்தினுள் மறைந்து போனது. பிரமிப்பிலிருந்து மீள முடியாமல் கோழிகள் கண்களை அகல விரித்தபடியே வானத்தை வெறித்துக் கொண்டிருந்தன. இருண்ட மேகங்களுக்குப் பின்னே செறிந்த நீலநிற ஒளி தோன்றிப் பூமியை நோக்கி நகரத்தொடங்கியது. ஆ, எங்கள் வனதேவதை, எங்கள் வனதேவதை அதோ அதோ வந்து கொண்டிருக்கிறது எங்கள் வனதேவதை' என்று சந்தோஷ மிகுதியில் எல்லாக் கோழிகளும் கூச்சலிட்டன.

நீல ஒளிப்பின்னணியில் வெண்தாமரைப்பூவில் அமர்ந்துகொண்டு மெதுவாய். மெதுவாய். இறங்கிவந்து கொண்டிருந்தது வனதேவதை. புன்னகை பூத்த முகம், சாந்தமான பார்வை, இடக்கையிலிருக்கும் வெண்புறாவைத் தடவிக்கொடுத்தபடி வலக்கை, வனதேவதையின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சிவப்புச் சேவல், கோழிகள் ஒன்றையொன்று கட்டிப்பிடித்துக் கொண்டன. ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொண்டன. கச்சேரியைத் தொடங்கும்படி குயில்களுக்கு கட்டளையிட்டன. இருக்கும் தம் சிறகுகளையும் பிடுங்கி வர்ணம் தோய்த்து வானில் பறக்கவிட்டன. எல்லாம் நல்ல விதமாய் நடக்கும் திருப்தி தேவதையின் முகத்தில் பிரதிபலித்தது. திடீரென எங்கோ ஒரு முழக்கம்.

வனதேவதையின் முகம் மாறிப்போனது.

பூமியை நோக்கி இறங்கி வந்துகொண்டிருந்த வனதேவதை அந்தரத்தில் அப்படியே நின்று கொண்டது. வெண்தாமரைப் பூவிற்குள் ஒளித்து வைத்திருந்த கழுகினை வெளியே எடுத்து, கையிலிருந்த வெண்புறாவினை கழுகின் காலடியில் கட்டி விட்டது. பின் கழுகின் செட்டைகளைச் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து விட்டது.

முன்னொருபோதுமில்லாத வேகத்தில் பறந்து வந்தது கழுகு. மரங்கள் சடசடத்து முறிந்தன. ஓடைகள் பொங்கி எழுந்தன. காற்று சுழன்று சுழன்றடித்தது. கழுகின் கண்களிலிருந்து வெளிப்பட்ட கதிர்களினால் புதர்கள் எரிந்தன. கூடியிருந்த கோழிகளின் மீது அடங்காப் பசியுடன் பாய்ந்தது கழுகு, கோழிகள் நாலாப் பக்கமும் சிதறி ஓடின. மரண ஓலமிட்டன. கழுகின் கோபப்பார்வையில் எரிந்துபோன தம் புதல்வர்களையெல்லாம் ஏக்கமாய்ப் பார்த்தன. கழுகின் காலடியில் கிடந்தவாறே கூடவே இழுபட்டது வெண்புறா, கோழிகள் தம்முயிர் காக்க மறைவிடம் தேடி ஓடிக் கொண்டிருந்தபோது, 'என்னருமைக் கோழிகளே, என் வெண்புறாவைப் பறக்க விடுவதற்கு உங்கள் மரங்களும், புதர்களும் தடையாக இருக்கின்றன. அதனால்தான் நான் கழுகினை அனுப்பி அவைகளை அழிக்கிறேன். எல்லாம் அழிந்தவுடன் என் வெண் புறா தடைகளின்றிப் பறந்து வரும் அஞ்சாதீர்கள்' என்று வனதேவதையின் அசரீரி கேட்டது. ராசம்மா கதை சொல்லி முடித்ததும் மௌனமாகிப் போனாள். குழந்தைகள் முகத்தில் ஒருவித கலவரம் தெரிந்தது. அவளின் மௌனம் அவர்களை என்னமோ செய்தது. அவளிடமிருந்து இலேசாய் விசும்பல் ஒலி கேட்டது. அவள்தலைகுனிந்திருந்தபடியால் அழுகிறாளா என்பதை அவர்களால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை. 'அப்ப இனி அங்க கோழிகள் திரும்பியும் போகாதோ அம்மம்மா' 'தெரியல்ல மக்காள்'

'பிறகென்ன நடந்தது அம்மம்மா

'தெரியல்ல மக்காள்' 'அங்க மரமொன்றும் முளைக்காதோ அம்மம்மா' 'அதுகும் தெரியல்ல மக்காள் எனக்கொண்டும் தெரியல்ல மக்காள்' இனியங்க என்ன நடக்கும் கோழிகள் வருமோ வராதோ, மரம் முளைக்குமோ, முளைக்காதோ, தேவதை எங்க போச்சி, கழுகு எப்படி செத்திச்சி, செத்திச்சுதோ சாகேல்லயோ, எனக்கொண்டுமே தெரியல்ல மக்காள்' அவள் திரும்பவும் மௌனமாகிப் போனாள். அவளின் முந்தானைத் தலைப்பை இழுத்துக் கொண்டு கண்ணன் இன்னும் அவளின் மடியினுள் கிடந்தான். பிரியாவும், சாந்தியும் எழுந்து திரும்பவும் படிப்பதற்காய் மண்டபத்தினுள் சென்று விட்டார்கள். அவளும் கண்ணனும் மாறனும் மட்டுமே வாசலில் தனித்திருந்தனர். மாறன் எதையோ தீவிரமாய் யோசிப்பவன் போல் காணப்பட்டான். சில கண நேரங்களில் அவளின் தோளை மெதுவாய்த் தொட்டான். என்ன என்பது போல் அவள் நிமிர்ந்து பார்த்தாள். 'கோழிகளுக்கு துவக்கு இருந்திருந்தா அந்த கழுக சுட்டுப் போட்டிருக்கலாம் எலா அம்மம்மா' பத்து வயது மாறனின் கண்களில் தெரிந்த வன்மம் பாட்டியைக் கிலி கொள்ள வைத்தது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் 46**

இலங்கையில் இந்திய ஆளுமையின் பின்புலத்தில்தான் ரணில் பிரதமராகும் விடயமும் அரங்கேறியது.

சஜித் பிரேமதாஸாவுடன் எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைக்க இருந்த தேசிய அரசில் ஜே.வி.பி. மற்றும் மற்ற இடதுசாரி கட்சிகளும் இடம்பெற்றிருக்கும். அப்படியான தேசிய அரசின் நாட்டு மக்களுக்கான கொள்கைகளால், ராஜபக்ஷக்கள் ஏற்றுக்கொண்ட – முன்னைய அத்தியாயத்தில் நான் குறிப்பிட்ட – இந்தியாவுடன் தொடர்புடைய இந்தத் திட்டங்கள் எல்லாம் மீள் பரிசோதனைக்காக கிடப்பில் போடப் படக்கூடிய வாய்ப்புகள் இருந்தன என்பதை இந்தியா கவனத்திலெடுத்திருக்கும்.

அத்தோடு சஜித்தின் தந்தையார் ரணசிங்க பிரேமதாஸாவோடும் ஜே.வி.பியினரோடும் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட நாள்களிலிருந்தே எழுந்த, இந்தியாவுக்கு எதிரான வெறுப்புணர்வுகளையும் இந்தியா மறந்துவிடவில்லை. அவர்களை நன்கு அறிந்து இருந்தமையால் காய்களை நகர்த்தி அந்தத் தேசிய அரசு ஏற்பாடுகளை வெட்டி, ரணிலை ஆதரவாக பார்த்தது பாரதம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை




வைத்துப் பணம் பெற்று, அதனால் லாபம் சேர்த்தது மஹிந்த தரப்புதான். ஆனால் அதன் முதலீடுகளின் வட்டிக் கடன்களை கட்ட முடியாமல் வேறு வழியில்லை என 99 வருட குத்தகைக்கு அதனை சீனாவிடம் கையளித்தது ரணிலின் அரசுதான். ஆனாலும் அவர் தமது நரித்தனத்தினால் அதனை ஒட்டிய இந்தியாவின் அதிருப்தியையும் சமன் செய்தார். வட்டி கட்ட முடியாத இயலாத் தன்மையால் செய்யப்பட்ட நடவடிக்கை அது என இந்தியாவைச் சமாளித்தார். விளக்கங்கள் கூறினார்.

ஆகவே ரணிலை வைத்துக்கொண்டு இந்தத் திட்டங்களை முன்னெடுக்கலாம், ஏற்கனவே அவர் செய்தவற்றிற்குப் பிராயச்சித்தமாகவும், கைமாறாகவும், அவரது பதவி இருப்புக்காகவும் இந்தியாவின் நியமனதாரிகளுக்கு அத்திட்டங்களைக் கையளிக்கலாம் எனக் கருதி



ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்தியா முற்கூட்டியே கணித்தமை போல ஜே.வி.பி., சோலிஸ்ட் முன்னணி கட்சிகளின் பின்னணிகளில் தேசியவாதிகளின் கட்சிகள் அதானி குழுமத்துக்கு எதிராகக் கிளர்ந்திருக்கின்றமையைக் கவனிக்க வேண்டும். அது வர்க்கப் போராட்டமாக, இந்தியாவின் ஆளுகைக்கு எதிரான போராட்டமாகவும் நகர்த்தப்படும் விவகாரமாகும்.

இந்தத் திட்டங்கள் மட்டுமல்ல மேலும் பலவும் இரண்டு நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டுள்ளன. ஒன்றிரண்டை உதாரணத்திற்குச் சொல்வதானால், கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையமொன்றை மன்னார் குடா பகுதியிலிருந்து நடத்துவதற்குத் தற்சமயம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்படியான திட்டங்களுக்கு ஒழுங்குகள் சீனாவுடன் முன்னர் இருந்தாலும், அவற்றைக் கைவிட்டுவிட்டு இந்தியாவுடன் இது சம்பந்தமான ஒப்பந்தங்கள் இப்போது கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதன் முக்கியத்துவம் என்னவெனில் இதனடிப்படையில் இந்திய உளவு விமானங்கள் ஸ்ரீலங்காவின் வான் பரப்பை பயன்படுத்துவது மட்டுமல்ல, இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்து கடல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் உத்தியாகவும் இது இருக்கும். அத்தோடு ஸ்ரீலங்காவின் மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய நிதி தந்து அவற்றில் இந்தியா நேரடியாக ஈடுபடவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவை நடைமுறைக்கு வந்து அமல்படுத்தப்பட்டால் கச்சதீவை இந்தியா குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்பதும், அதனை இந்தியாவின் ஆளுமைக்குள் எடுத்தால் இலங்கை மீனவர்கள் பாதிப்படைவார்கள் என்பதும் எல்லாம் வெறும் அரசியல் கோங்களாகுமே ஒழிய, கச்சதீவு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகலாம், அதனால் அதனை இந்தியா மீளப் பெறவேண்டும் என்பதும் கூட அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற மாதிரிதானாகிவிடும்.

கச்சதீவை ஒட்டி செய்யப்பட்ட ஒப்பந்தங்களால் இந்தியாவை மீறி, அதனை ஸ்ரீலங்கா யாருக்கும் பாவனைக்குக் கொடுத்துவிட முடியாது. மீன்பிடித் துறைமுகமாக அதனை மேம்படுத்துவது கூட இருநாடுகளுக்கும் இடையிலான இணக்கமான ஏற்பாடாகதான் உருவாகும். ஆகவே அது இப்போது ஒரு பெரிய விடயமாக பார்க்கப்பட வேண்டியது அல்ல.

பொருளாதார நெருக்கடிகளினால் தற்சமயம் ஸ்ரீலங்காவின் பேரினவாதமும், இந்திய எதிர்ப்புப் போக்கும் எவ்வளவு தாழ்ந்து, வளைந்து அந்த நாட்டின் உதவிகளை நாடுகிறது, தங்கியிருக்கிறது என்பவற்றையெல்லாம் கணக்கெடுத்து, இந்தியா எங்கு, எந்த வடிவங்களில் தனது கால்களைப் பாதிக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதம் தங்களோடு ஏற்படுத்திக்கொண்ட இணக்கங்கள், ஒப்பந்தங்கள் என்பவற்றிலிருந்து அதனை நம்பி நடந்தாலும், அது நம்பகமாக நடக்குமா என்று அறிவார்



கள்.

ஸ்ரீலங்காவோடு இந்தியாவுக்கும் இந்த அனுபவங்கள் பல உண்டு.

அதேபோல சர்வதேசமும், ஐ.நா. மனித உரிமைகள் மன்றும் கூட அவர்களது நம்பகத்தன்மையை எடை போட்டு இருப்பதால், பல நாடுகளும் நிதியோ, கடனோ தரத் தயக்கம் காட்டி உள்ளன. அவற்றை அறிந்து, அயல்நாடு, பிராந்தியத்தில் இந்தியாவின் ஆளுமைகள் தேவை என்பதாலும், தமிழ் மக்களுக்காக ஏற்படுத்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தரும் தார்மீக கடமை தனக்கு உண்டு என்பதாலும், ஸ்ரீலங்காவுக்கு இன்றுள்ள நெருக்கடி நிலையில், அதற்கு உதவிகள் செய்ய இந்தியா ஒத்துக் கொள்கிறது. ஆடுகிற மாட்டில் பால் கறக்க அதனைக் கட்டியும் போட்டுத்தானாக வேண்டும் என்பது இன்றைய இந்தியாவின் கோனார்களுக்கும் புரிந்திருக்கும். என்றாலும், தமிழ் மக்கள் மத்தியில் கூட மேற்குலகுக்கு சார்பான – வர்க்க ரீதியாக



ஆழ ஊறிய 'இலங்கையன்' என்பதில் ஒரு மதிப்பு, பெருமை என்பதில் இந்திய எதிர்ப்பு வாதமும் இந்தியாவுடன் மனரீதியாக இணைந்து கொள்ளாத நிலையும் வாதமும் நிறைந்து நிற்கின்றன. சுதந்திர காலத்திலிருந்து தமிழ் மக்களின் அரசியலை நடத்திய தலைவர்களின் போக்கும், அதை வளர்த்து, பின் இந்தியா தமிழரின் தனிநாட்டுக் எதிரானது, அதை அடைய முயற்சி செய்த விடுதலைப் புலிகளை அழிக்க உதவி செய்தது, தமிழருக்கு சாதகமாக எதையும் செய்யவில்லை எனப் பல வடிவங்களில் கருத்து நிலைப்பாடுகள் உண்டு.

நான் முன் கூறியவாறு தமிழ் மக்கள் தங்களைச் சுற்றி நடக்கும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது. ஆனால் அவற்றை எப்படி எதிர்நோக்குவது என்பதில் ஒரு வழியை உருவாக்கலாம். இந்தியா ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் நம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் எங்களது அணுகுமுறைகளால் எங்களுக்கான வழிகளை, அதனுடன் இணைந்து ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(வளரும்)

# உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தையைப் போற்றும் விசேட தினம் இன்று

**உலகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் தினம் - 'போப்ஸ் டே' - இன்று 26 ஜீன் 2022 அன்று உலகெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. 85 வயதை அடையும் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் தன் திருத்தந்தை பணியின் 09 ஆம் ஆண்டை (2013 - 2022) இவ்வாண்டு நிறைவு செய்கிறார் என்பதும் இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும்.**


- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

### இலங்கையின் சகல மறைமாவட்டங்களின் அனைத்துப் பங்குகளிலும் திருத்தந்தை தினம்

இலங்கையில் கொழும்பு 08, பல்கம் பிளேஸ் என்ற இடத்தில் அமைந்துள்ள பாப்பிறை மறைபரப்பு சபைகள் என்ற அமைப்பு இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களின் எல்லா பங்குகளிலும் திருத்தந்தை தினம் (போப்ஸ் டே) சிறப்பாக கொண்டாடப்படும் வகையில் பனர்கள், ஆயத்த வழிகாட்டல் குறிப்புக்கள் என்பவற்றை அனுப்பி இத்தினத்தை இலங்கை முழுவதிலும் சிறப்பாக கொண்டாட வழி செய்திருந்தது.

### யாழ் மறைமாவட்டத்தில் திருத்தந்தை தினம்

இலங்கை முழுவதிலும் சிறப்பாக கொண்டாடப்பட்ட திருத்தந்தை தினம் யாழ் மறைமாவட்டத்தின் எல்லா



பங்கு ஆலயங்களிலும் இன்று சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களின் எல்லா பங்குகளிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டிய - பாப்பிறை மறைபரப்பு சபைகள் என்ற அமைப்பால் மும்மொழிகளில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட - பதாகைகள் யாழ் மறைமாவட்டத்தின் எல்லா பங்கு ஆலயங்களிலும் சிறப்பு முக்கியத்துவத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு, திருப்பலி வழிபாடு, மறையுரை - விசுவாசிகள் மன்றாட்டு என்பன எல்லாம் தயாரித்து அனுப்பப்பட்டபடி சிறப்பாக நடத்தப்படுகின்றன.

திருத்தந்தைக்கு இறையாசீர் வேண்டும் பழைய பராம்பரிய பாடலான 'எங்கள் ஞானத் தந்தையர்க்கே இறைவனே ஆசீர் அருள்குவிரே!' என்ற பாடல் திருப்பலியின் இறுதியில் எல்லோராலும் வானதிரப்பாடப்பட்டு திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களுக்கு இறையாசீர் வேண்டப்படும்.

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் 2013ஆம் ஆண்டு திருத்தந்தை பணிப் பொறுப்பை ஏற்று மிகவும் வித்தியாசமான முறையில் அனைவரையும் கவரும் விதமாக நடத்தி வருகிறார். அனைவரையும் அன்பு செய்தல் - அனைவரையும் ஏற்றுக்கொள்ளல் - அனைவரையும் புரிந்து கொள்ளல் - அனைவருக்கும் விட்டுக்கொடுத்தல் என்ற நற்பண்புகளோடு எப்போதும் மனிதாபிமானமாக செயற்படல் போன்ற என்ற நோக்குடன் செயற்படுவதால் உலகின் கவனம் அவர் மீதே உள்ளது.

### தனித்துவமான நகரின் தனித்துவத் தலைவர்

வத்திக்கான் நகரின் அரசியல் தலைவரும், உரோமை நகரின் ஆயரும் உலகெங்கும் பரந்து வாழும் 120 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவரும் திருத்தந்தை பிரான்சீஸ் ஆவர். 108.7 ஏக்கர் பரப்பளவு கொண்ட வத்திக்கான் நகர் இத்தாலி நாட்டின் உரோமை நகரிலுள்ள ஒரு தன்னாட்சியுடைய ஒரு சுதந்திர நாடாகும். வத்திக்கான் நகர் உலகின் மிகச் சிறிய நாடு ஆகும். உலக கத்தோலிக்க மதத்தின் தலைமை மையமான வத்திக்கான் நகரில் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் அதிகாரப்பூர்வ உறைவிடம் திருத்தூதரக அரண்மனை என்ற பெயரில் அமைந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் இயற்பெயர் கோர்கே மாரியோ பெர்கோலியோ என்பதாகும். இவர் 13 மார்ச் 2013 அன்று கத்தோலிக்க திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




தென் அமெரிக்காவின் முதல் திருத்தந்தை - இயேசு சபையின் முதல் திருத்தந்தை - ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்புக்கள் இவருக்கு உண்டு.

### பல விருதுகளுக்கும் பட்டங்களுக்கும் சொந்தக்காரர் திருத்தந்தை பிரான்சீஸ்

திருத்தந்தை பணி ஏற்று குறுகிய காலத்திலேயே தம் வாழ்வாலும் பணியாலும் உலகின் கவனத்தை தம்பால் திருப்பியுள்ளார். உலகின் கண்களும் ஊடகத்தின் பார்வையும் அவரை நோக்கியே எப்போதும் திரும்பியுள்ளன. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் இன, மத, நிற பேதமின்றி அனைவராலும் விரும்பப்படும் ஒருவரானார். பணியேற்ற அதே ஆண்டிலேயே திருத்தந்தை பிரான்சீஸ் 2013ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக ரைம் சஞ்சிகையால் அறிவிக்கப்பட்டார்.

திருத்தந்தை 23ஆம் அருளப்பர் 1963ஆம் ஆண்டிலும், திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் 1994ஆம் ஆண்டிலும் இவ்விருதைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல மதிப்பு வாய்ந்த மனிதர்கள் மத்தியில் மதிப்பிடப்பட்டு முதன்மையானவராகத் திருத்தந்தை பிரான்சீஸ் இவ்விருதைப் பெறுவதற்கு கத்தோலிக்க திருச்சபையில் நம்பிக்கை இழந்து விலகியவர்களின் மனதுகளை தொட்டு தமது ஆட்சியின் மிகக் குறுகிய காலத்திலேயே மனம் மாற்றக் கூடிய வல்லமை மிக்கவராக விளங்கியமையே காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

2014 ஆம் ஆண்டு உலக சர்வதேச நோபல் பரிசுக்காக திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் பெயரும் சிபாரிசு செய்யப்பட்டமை பலரும் அறியாத ஒரு தகவலாகும். அவர் அவ்விருதைப் பெறாவிடினும் தகுதி பெற்ற ஒருவராகக் கருதப்பட்டது ஒரு மதிப்பார்ந்த விடயமாகும். மிகக் குறுகிய காலத்தில் அனைவர் கவனத்தையும் ஈர்ந்த இவர் இன்னும் நிறையவே சாதிப்பார் என எதிர்பார்க்கலாம்.

2016ஆம் ஆண்டிற்கான ஐரோப்பாவின் ஒருமைப்பாட்டிற்காக உழைக்கும் சர்வதேச சார்ளிமாஞ்ன விருதை திருத்தந்தை பிரான்சீஸ் பெற்றுக்கொண்டார். 2004 ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் யோண் போல் அவர்களும் இதே விருதைப் பெற்றவர் ஆவார்.

### ஒரு நுரையீரல் உடனேயே பணி

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களின் 20ஆவது வயதில் அவருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அவரின் ஒரு நுரையீரல் செயல்பாடு இழந்தது. ஒரு நுரையீரல் உடனேயே இன்றும் அவர் பணியாற்றுகிறார் என்பது அங்கு நோக்கப்பட வேண்டும். 85 வயதான திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் தமது கடின வேலைப்பழு காரணமாக 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இரு தடவை பொதுமேடையில் நிலைதடுமாறி விழுந்துள்ளார் என்பது உலக கத்தோலிக்க மக்களால் கவலையுடன் நோக்கப்படுகிறது.

ஓய்வு நிலையில் உள்ள திருத்தந்தை 16ஆம் பெனடிற் அவர்கள் பணியில் இருந்தபோது அவருக்கு செய்தது போல் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களையும் அதிகம் நடக்க விடாமல் ஒரு மரத்தினாலான பீடத்தில் நிற்க விட்டு இழுத்து வரவேண்டும் என பலர் திரு அவைக்குக் கருத்து தெரிவித்துள்ள நிலையில் அவர் தற்போது முழங்கால் வலியால் பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் அழைத்து வரப்படுகிறார்.




### கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள்

திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் - திருத்தந்தை பிரான்சீஸ் - ஆகிய இரு திருத்தந்தையர்களும் கத்தோலிக்க திருச்சபையில் சம காலத்தில் இருப்பது ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு.

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள் ஒரே நேரத்தில் இருந்தார்கள் என்பது 600 ஆண்டுகளாக நடைபெறாத சம்பவம். எனவேதான் தமது முதிர்ந்த வயது காரணமாகவும், உடல்நலக் குறைவு காரணமாகவும் தாம் திருத்தந்தைப் பணியைத் 2013 பெப்ரவரி 28ஆம் நாள் துறக்கப் போகிறார் எனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் வெளியிட்ட செய்தி உலகக் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்தவரை ஒரு மிக அதிர்ச்சியான செய்தியாக அமைந்தது. 600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகியதில்லை என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி என்பதே வழக்கம். திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர்தான் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்த இரு திருத்தந்தையர்களும் 2013 ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி முதற் தடவையாக அதிகாரபூர்வமாகச் சந்தித்தனர்.

அதன் பின்னர் அதிகாரபூர்வமாகச் சந்திக்கும் நிகழ்வு திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்களின் 65ஆவது குருத்துவ ஆண்டுதினம் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி கொண்டாடப்பட்டபோது இடம்பெற்றது. அதில் திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்கள் பணி ஓய்வுபெற்ற பின் இரண்டாவது தடவையாக பகிரங்கமான உரை ஒன்றினை ஆற்ற அழைக்கப்பட்டார்.

இரு திருத்தந்தையர்களின் சந்திப்புப்பற்றிய முத்திரை ஒன்றை வத்திக்கான் வெளியிட்டுள்ளது. அம்முத்திரை இவ்வாக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

85 வயதை அடையும் திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களும் 95 வயதை அடையும் ஓய்வுநிலை திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்களும் தம் வாழ்வையும் பணியையும் தொடரும் வரை கத்தோலிக்க திருச்சபையில் சம காலத்தில் இரு திருத்தந்தையர்கள் இருப்பது ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஒரு அபூர்வ நிகழ்வு என்ற வரலாறு நீடிக்கவே செய்யும்.

# மோடிக்கு எதிரான குஜராத் கலவர வழக்கை 19 ஆண்டுகால முடிவில் நீதிமன்று தள்ளுபடி



கடந்த 2002 ஆம் ஆண்டு நடந்த குஜராத் கலவரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தில் பலர் பலியாகினர். இதைத் தொடர்ந்து, இந்த மாநிலத்தின் குல்பர்க் குடியிருப்புப் பகுதியில் நடந்த கலவரத்தின் போது காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் இஷான் ஜாபர் படு கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் சிறப்பு புலனாய்வு விசாரணை கேட்டு தொடரப்பட்ட வழக்கை விசாரித்த குஜராத் உயர் நீதி மன்றம், அதில் முகாந்திரம் இல்லை எனக்கூறி தள்ளு படி செய்தது.

இதை எதிர்த்து இஷான் ஜாபரின் மனைவி ஜக்கியா ஜாபர் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக் கல் செய்தார்.

அதில், 'கோத்ரா கலவரத்துக்கு குஜராத் மாநிலத் தின் அப்போதைய முதல்வராக இருந்த நரேந்திர மோடிதான் முக்கிய காரணம். இந்த வழக்கில் மோடி உட்பட 58 பேரின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தன. வழக்கை விசாரித்த சிறப்பு புலனாய்வுக்குழு (எஸ்.ஐ.டி) குற்றச்சாட்டுக்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறி மோடி உட்பட அனைவரின் பெயரையும் வழக்கில் இருந்து நீக்கி விடுதலை செய்தது தவறு?' என தெரி விக்கப்பட்டிருந்தது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்தது. இந்நிலையில், நீதி பதிகள் ஏ.எம்.கன்வீல்கர், தினேஷ் மகேஷ்வரி மற்றும் சி.டி.ரவிக்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

அதில், 'குஜராத் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு மீண்டும் உறுதி செய்யப்படுகிறது. குஜராத் கலவரத் தின் பின்னணியில் பெரிய சதித்திட்டம் இருப்பதாகவும், அதனை விசாரிக்க சிறப்பு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையும் நிராகரிக்கப்படுகிறது. இத்தகைய மனுக்கள் மேல் முறையீட்டுக்கு தகுதியற்றவை' எனத் தெரிவித்த நீதி பதிகள், ஜாபரின் மேன் முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

**வலியைத் தாங்கி 19 ஆண்டுகள் போராடிய பிரதமர் மோடிக்கு அமித் ஷா புகழாரம்**

குஜராத் கலவர வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதி மன்ற தீர்ப்பை சுட்டிக்காட்டி பிரதமர் மோடியை புகழ்ந் துள்ளார் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில் –

பிரதமர் நரேந்திர மோடி ஓர் உயர்ந்த தலைவர். அவர் மீது குஜராத் கலவர வழக்கு 19 ஆண்டுகள் நடந் தன. அவர் அத்தனை காலமும் பொறுமையாகவே இருந்தார். அந்த வழக்கு நிலுவையில் இருந்த காலத் தில் அவர் வழக்கு தொடர்பாக எதுவுமே விமர்சிக்க வில்லை. அவருடைய வேதனைகளை நான் அருகிலி ருந்து பார்த்திருக்கிறேன். கடவுள் சிவனைப் போல் சோதனைகளை தாங்கினார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் பலரும் மோடிக்கு எதிராக அவதூறு பேசினர். எதிர்க்கட்சிகள், அரசியல் சார்புடைய பத்திரிகையாளர்கள், சில அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் எனக் கூட்டு சேர்ந்து மோடிக்கு எதிராக பேசினர். அவர்களின் பொய் வேகமாக மோடிக்கு எதிராக கட்டமைக்கப்பட்டது. அந்த கட்ட மைப்பை உண்மை என சிலரும் நம்பத் தொடங்கினர். ஆனாலும் அவர் சோர்ந்து போகவில்லை.

19 ஆண்டு கால வழக்கை சந்தித்த மோடி, எந்தவித ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. போராட்டமும் நடத்த வில்லை. சிறப்பு புலனாய்வு விசாரணைகளுக்கு ஒத் துழைத்தார். எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் யாரும் அவ ருக்கு ஆதரவாக தர்ணா செய்யவில்லை. ஜனநாயக நாட்டில் அரசியல் சாசனத்திற்கு மரியாதை தருவதில் பிரதமர் நரேந்திர மோடி ஓர் உதாரணம்.

ஆனால் இன்று ராகுல் காந்தி விசாரணைக்கு இத் தனை எதிர்ப்புகள் அக்கட்சியினரால் இப்போது எழுப் பப்படுகின்றன என்று கூறினார்.



## ஜி – 7 நாடுகளின் ஜேர்மன் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி சிறப்பு உரை

ஜி – 7 நாடுகளின் மாநாடு இன்றும் நாளையும் ஜேர்மனியில் நடக்கிறது. இம்மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்க இந்திய பிரதமர் மோடிக்கு ஜேர்மனி அதிபர் ஒலாப் ஸ்கோல்ஸ் அழைப்பு விடுத் தார். இதை ஏற்றுக்கொண்ட மோடி, ஜி – 7 மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்று ஜேர்மனிக்கு புறப்பட்டு சென்றார்.

மாநாட்டில் சுற்றுச்சூழல், எரிசக்தி, காலநிலை, உணவு பாதுகாப்பு, சுகாதாரம் பாலின சமத்துவம் மற் றும் ஜனநாயகம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து மோடி பேசுகிறார்.

மேலும் அங்கு பல்வேறு நாட்டுத் தலைவர்களை மோடி சந்தித்து பேசுவார் என்று தெரிகிறது. ஜேர்மனி யில் இரண்டு நாள்கள் தங்கியிருக்கும் மோடி, 28 ஆம் திகதி நாடு திரும்பும் வழியில் ஐக்கிய அரபு எமிரேட் ஸுக்கும் செல்கிறார். அந்நாட்டின் முன்னாள் அதிபர் ஷேக் கலிபா பின் ஜயீத் அல் நஹ்யன் மறைவுக்கு மோடி இரங்கல் தெரிவித்திருக்கிறார். ஐக்கிய அரபு எமிரேட்ஸின் புதிய அதிபராகவும், அபுதாபியின் ஆட்சி யாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சந்தித்து பேசுகிறார்.

## 196 கோடி 62 லட்சம் கொவிட் தடுப்பூசி டோஸ்கள் இந்தியாவில் இதுவரையில் செலுத்தப்பட்டு சாதனை



இந்தியாவின் ஒட்டுமொத்த கொவிட் – 19 தடுப்பூசி 'கவரேஜ்' கடந்த வியாழனன்று 196.62 கோடிகளை (1,96,62,11,973) தாண்டியுள்ளதாக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வியாழனன்று காலை 7 மணி வரையிலான தற்கா லிக அறிக்கைகளின்படி, இந்தியா 2,54,44,218 அமர்வுகள் வழங்கல் மூலம் இந்த இலக்கைக் கடந் துள்ளது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, 12 – 14 வயதுக்குட்பட்ட இளம் பருவத்தினருக்கான தடுப்பூசி இயக்கத்தின் தொடக்கத்திலிருந்து, 3.60 கோடி (3,60,03,591) பேருக்கு கொவிட் – 19 தடுப்பூசியின் முதல் டோஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், 18 – 59 வயதுக்குட்பட்டவர்களுக்கு 2,73,69,417 முன்னாயத்த எதிர்ப்பு டோஸ்கள் வழங் கப்பட்டுள்ளன (இதில் 22,24,238 டோஸ்கள் 18 – 44 வயதுக்குட்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. 45 – 59 வயதுக்குட்பட்டவர்களுக்கு 21,99,106 மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2,29,46,073)

18 – 59 வயதுக்குட்பட்டோருக்கான முன்னெச்ச ரிக்கை மருந்துகளுக் கான நாடு தழுவிய நிர் வாகம் ஏப்ரல் 10 அன்று தொடங்கியது.

நாடுதழுவிய தடுப்பூசி இயக்கத்தின் ஒரு பகுதி யாக, இந்திய அரசு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்க ளுக்கு கொவிட் தடுப்பூசி களை இலவசமாக வழங் குவதன் மூலம் அவர் களுக்கு ஆதரவளித்து வருகிறது. கொவிட் – 19 தடுப்பூசி இயக்கத்தின் உலகளாவிய மயமாக்க லின் புதிய கட்டத்தில், நாட்டில் தடுப்பூசி உற்பத்தி யாளர்களால் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளில் 75 சதவீதத்தை மத்திய அரசு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கொள்முதல் செய்து (இல வசமாக) வழங்கும்.

இந்தியாவின் தற்போதைய செயலில் உள்ள தொற் றாளர் தேக்க நுலை 83,990 ஆக உள்ளது என்றும், இது நாட்டின் மொத்த நேர்மறை வழக்குகளில் 0.19 சதவீதமாகும் என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித் துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் புதிதாக 13,313 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 10,972 நோயாளிகள் நோயிலிருந்து மீண்ட பிறகு இந்தியாவின் தற்போதைய மீட்பு விகிதம் 98.60 சதவீதமாக உள்ளது, மீட்கப்பட்ட நோயாளிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை (தொற்று நோயின் தொடக்கத்திலிருந்து) 4 கோடி 27 லட்சத்து 36 ஆயிரத்து 027 ஆகக் உள்ளது.

**(மூலம்:- ஏ.என்.ஐ.)**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2022இல் வெளியிடப்பெற்றது.